பக்கங்கள்: 11

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஐப்பசி06 புதன்கிழமை 23.10.2024 கதிர் 350

### இனி இது ரகசியம் அல்ல!

நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரைக் காலம் என்றாலும் வடக்கு கிழக்கில் பெரும் பரபரப்பு இல்லை. காரணம் கட்சிகள் பெரும் கூட்டங்களை ஏற்பாடு ☞ 2

## ஜனாதிபதி செயலக அதிகாரியிடம் 6 மணி நேரம் சிஐடி விசாரணை

**29 வாகனங்கள் மாயமானது குறித்து**

ஜனாதிபதி செயலகத்திற்குச் சொந்தமான பல கோடி ரூபாய் பெறுமதியான 12 மோட்டார் சைக்கிள்கள் உட்பட 29 வாகனங்கள் காணாமற்போனமை தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு (சிஐடி) கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் பிரகாரம் ஜனாதிபதி பணியிட போக்குவரத்துப் பிரிவின் பணிப்பாளரிடம் கிட்டத்தட்ட ஆறரை மணி நேரம். வாக்குமூலம் பெற்றுள்ளதாக பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, பொலிஸ் மா அதிபருக்கு எழுத்து மூலம் வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில் இந்த விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ஒன்பது கார்கள், 12 மோட்டார் சைக்கிள்கள், 6 வண்டிகள் மற்றும் இரண்டு டிராக்டர்கள் இவ்வாறு காணாமற்போன வாகனங்களில் அடங்கும்.

2022ஆம் ஆண்டு கணக்காய்வு திணைக்களத்தினால் நடத்தப்பட்ட தணிக்கை அறிக்கையில், ஜனாதிபதி அலுவலகத்தின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்ட 800 க்கும் மேற்பட்ட வாகனங்களில் 51 வாகனங்கள் காணாமல் ☞ 2

## அமைச்சரவை அனுமதிகள்

திங்கட்கிழமை நடைபெற்ற அமைச்சரவையில் ஜனாதிபதி மற்றும் பிரதமர், அமைச்சர் ஆகியோரால் முன்வைக்கப்பட்ட பல திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் விவரம் வருமாறு:

அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான சுற்றுலா விடுதிகள் உயரிய பயனைப் பெறும் வகையில் பொருத்தமான பொறிமுறையை விதந்துரைப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழுவின் விதந்துரைகளின் அடிப்படையில் நவீனமயப்படுத்த வேண்டிய 9 விடுதிகள் வனப்பாதுகாப்புத் திணைக்களத்தால் அடையாளங் காணப்பட்டுள்ளன.

அதற்காக166.93மில்லியன் ☞ 8

## இன்று தீர்ப்பு

வன்னி மாவட்டத்தில் போட்டியிடுவதற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுவை நிராகரித்து மாவட்ட தேர்தல் அதிகாரி எடுத்த தீர்மானத்தை இரத்துச் செய்து ஆணை பிறப்பிக்குமாறு கோரி ஜனநாயக தேசியக் கூட்டமைப்பு தாக்கல் செய்த மனு மீதான தீர்ப்பு இன்று வழங்கப்படும் என்று உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது.

நீதியரசர்களான பிரிதி பத்மன் சூரசேன, ஷிரான் குணரத்ன மற்றும் அச்சல வெங்கப்புலி ஆகிய மூவரடங்கிய நீதியரசர்கள் ஆயம் இந்த வழக்கின் தீர்ப்பை இன்று நீதிமன்றத்தில் ☞ 2

## நடமாடும் மையங்கள் மூலம் இனித் தேங்காய் விற்பனை

**விலை உயர்வை எதிர்கொள்ள புதிய திட்டம்**

நடமாடும் விற்பனை வாகனங்கள் மூலம் தேங்காய்களை 100- முதல் 120 ரூபாய்க்கு விற்பனை செய்யும் வேலைத் திட்டத்தை இன்று முதல் நடைமுறைப்படுத்த தென்னை பயிர்ச்செய்கை சபை ☞ 2

# எதிர்க்கட்சித் தலைவர் சஜித்தின் பணியிடத்திலும் மோசடியா?

நாடாளுமன்ற முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் 2023 ஜனவரி மாதம் முதல் டிசெம்பர் மாதம் வரை கைரேகை இயந்திரம் மூலம் நேரத்தைச் சரிபார்க்காமல் மேலதிக நேரக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முப்பது இலட்சம் ரூபாவிற்கும் அதிகமான மேலதிக நேர கொடுப்பனவுகள் இவ்வாறு செலுத்தப்பட்டதாக கூறப்படுகிறது.

2009ஆம் ஆண்டு பொது நிர்வாக சுற்றறிக்கையின்படி, பணி நேரத்திற்குப் பிறகு வழங்கப்படும் மேலதிக நேரக் கொடுப்பனவுகள் நேரத்தின் அடிப்படையில் இருந்தால், கைரேகை இயந்திரம் மூலம் நேரத்தை சரிபார்க்கவேண்டும்.

இதேவேளை, எதிர்க்கட்சித் தலைவர் பணி இடத்தில் உள்ள கணக்காய்வுக் கடமைகளை உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான முறைமை ஒன்றும் தயாரிக்கப்படவில்லை எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தின் 2023ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள கணக்காய்வு அறிக்கையில் இந்தத் தகவல் குறிப்பிடப்பட்டுள்ளது.

## திறைசேரி முகாமைக்கு அதிகாரிகள் நியமிப்பு

திறைசேரியின் உயர் முகாமைத் துவத்திற்கு அதிகாரிகளை நியமிப்பதற்கு ஆளும்தரப்பு தீர்மானித்துள்ளது.

நிதி, பொருளாதார அபிவிருத்தி, கொள்கை வகுப்பு, திட்டமிடல் மற்றும் சுற்றுலா அமைச்சராக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க சமர்ப்பித்த யோசனைக்கமைய இப்புதிய நியமனங்களுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தற்போது திறைசேரி நடவடிக்கைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாகக் கடமையாற்றும் இலங்கை கணக்காளர் சேவையின் விசேட தர உத்தியோகத்தரான சில்வாவை திறைசேரியின் பிரதிச் ☞ 8

**வடக்கு மீன்பிடிப் பிரச்சினை குறித்து**

## ஜனாதிபதியின் செயலருடன் இந்தியத் தூதர் நேற்று பேச்சு

இலங்கைக்கான இந்திய உயர் ஆணையர் சந்தோஷ் ஜா ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக குமாநாயக்கவை நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் சந்தித்தார்.

வடக்குக் கடலில் தற்போது நிலவும் கடற்றொழில் பிரச்சினைகளை தீர்ப்பது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டது. ஒத்துழைப்பை மேம்படுத்துவதன் மூலம் இரு நாட்டு மீனவர்களின் பிரச்சினைகளுக்கு நீண்டகால தீர்வு காணப்பட வேண்டியதன் அவசியத்தை இரு தரப்பினரும் வலியுறுத்தினர்.

இரு நாடுகளும் எதிர்கொள்ளும் பொதுவான சவால்களை வெற்றி கொள்வதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆராயப்பட்டது.

இச்சந்திப்பில் இலங்கையில் தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் இந்திய திட்டங்கள் தொடர்பிலும் மீளாய்வு நடத்தப்பட்டது.

இந்தியக் கடன் உதவிகள் மூலம் நிதியளிக்கப்பட்ட திட்டங்களின் தற்போதைய முன்னேற்றம் குறித்து ☞ 2



**உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில்**

## ஷானி, ரவி செனவிரட்ன மீது எந்த நடவடிக்கையும் இல்லை

**அமைச்சர் விஜித ஹேரத் அறிவிப்பு**

உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புக்கள் தொடர்பில் விசாரிக்க நியமிக்கப்பட்ட இருஜனாதிபதி ஆணைக்குழுக்களின் அறிக்கையின் பரிந்துரைகளுக்கேற்ப ஷானி அபேசேகர மற்றும் ரவி செனவிரட்ண ஆகியோர் மீது நடவடிக்கை எடுத்து உதய கம்மன்பிலவின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதற்கு ஆளும்தரப்புத் தயாராக இல்லை என்று அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர்கள் சந்திப்பில் நேற்று இதனைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவித்தாவது:

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் முதலில் விசாரணைக்குழு ☞ 2

## ரணிலின் அறிக்கை இன்று வெளிவரும்

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இன்றையதினம் மீண்டும் ஒரு விசேட அறிவிப்பை வெளியிடவுள்ளார்.

ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பாக தமது பதவிக் காலத்தில் தம்மால் நியமிக்கப்பட்ட 2 விசாரணைக் குழுக்களின் அறிக்கைகள் தொடர்பாக அவரது விசேட உரை அமையும் என அவருக்கு நெருக்கமான தரப்பினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கைகளில் ஒன்றை முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில அண்மையில் வெளியிட்டிருந்த நிலையில், ரணிலின் விசேட அறிக்கையை வெளியிடத் தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தேர்தல் முடிந்து 21 நாட்களுள் செலவு விவரம் தரவேண்டும்

**தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு**

நாடாளுமன்றத் தேர்தல் வாக்களிப்பு முடிந்து 21 நாட்களுக்குள் கட்சிகள் மற்றும் சுயேச்சைகள் தமது செலவுக் கணக்கு விவரங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்தார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் பணியிடத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொதுத் தேர்தலுக்கான ☞ 8

**பொலிஸ் அதிரடிப்படையின்**

## துப்பாக்கிச் சூட்டுப் பயிற்சியில் பொதுமகன் ஒருவர் படுகாயம்

பொலிஸ் விசேட அதிரடிப்படையினரின் துப்பாக்கிச் சூட்டுப் பயிற்சியின்போது சுடப்பட்ட குண்டு தாக்கி விவசாயத்தில் ஈடுபட்டிருந்த பொதுமகன் ஒருவர் கையில் படுகாயமடைந்தார்.

ஹொரணை கும்புக பொலிஸ் விசேட அதிரடிப்படையின் எலைட் பாதுகாப்புப் பயிற்சிப் பாடசாலையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுப் பயிற்சியின் போது ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

செய்யவில்லை. கூட்டங்களைக்கூட்டினாலும் மக்கள் திரளமாட்டார்கள் என்கிற அச்சமும் கட்சிகளுக்கு இருப்பதால் பெரும்பாலும் நேரடி வாக்குத் திரட்டல் முயற்சிகளில்தான் அரசியலாளர்கள் இறங்கியிருக்கிறார்கள். 'பொக்கெட் மீட்டிங்ஸ்' எனப்படும் சிறு சந்திப்புக்களிலேயே அவர்கள் தீவிரமாக இருக்கிறார்கள்.

இத்தகைய சிறு சந்திப்புக்களில் வேட்பாளர்கள் சிலர் அடித்துவிடும் கதைகள் பெரும் குழப்பங்களுக்கும் வழிவகுகின்றன. இப்படித்தான் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் வேட்பாளர் ஒருவரின் கதையும்கூ-ட்டணிக்குள்ளேயே குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அவரோடு சேர்ந்து நாம் பரப்புரை செய்யமாட்டோம் என்று மற்றவர்கள் முரண்டு பிடிக்கிறார்கள்.

அந்த வேட்பாளர் அப்படி என்னதான் சொன்னார்? அடுத்த ஆட்சியில் தானேதான் மீன்பிடித்துறை அமைச்சர் என்று கதையளந்துவிட்டிருக்கின்றார். அவரது கட்சியின் தலைவரும் வன்னிமாவட்ட முன்னாள்நாடாளுமன்றஉறுப்பினருமானவர் ரணில் ஆட்சியில் 38 கோடி ரூபாய் அபிவிருத்தி நிதியைப் பெற்றிருக்கிறார். அதில் ஒரு 8 கோடி ரூபாயை யாழ்ப்பாணத்திற்கு ஒதுக்கியுள்ளார். அவரது கட்சியின் சார்பில் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியி-டும் ஒரு வேட்பாளரின் பரிந்துரைகளுக்கு ஏற்பட அந்த நிதி வாழ்வாதார உதவிகளாகவும் நேரடி உதவிகளாகவும் வழங்கப்பட்டு வருகின்றன. அந்த வேட்பாளர் கட்சிக்குள் தனக்கு விசுவாசமான ஒரு சிலரின் திட்டங்களுக்கு மட்டும் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார். இது கட்சியின் யாழ். மாவட்டக் கிளைக்குள்ளும் பெரும் பூகம்பத்தைக் கிளறியிருக்கின்றது.

இந்த 38 கோடியும் எப்படிப் பெறப்பட்டது என்பதற்கே கட்சிக்குள் ஒரு பயங்கரக் கதை சொல்கிறார்கள். தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்திய அரியநேத்திரனுக்கு ஆதரவாகத் தமது கட்சி வேலை செய்யாது என்றும் ரணிலுக்கு விழக்கூடிய வாக்குகளைப் பிரிக்க தமது கட்சி ஒருபோதும் துணைபோகாது என்றும் உறுதிமொழியைரணிலுக்குவழங்கி, அதன்படி செயற்பட்டதற்கான சன்மானமாகத்தான் இந்த நிதி ஒதுக்கப்பட்டது என்று கட்சியினரே தெரிவிக்கின்றனர்.

இப்போதுபிரச்சினை, அப்படித்துரோகத்தின் மூலம் பெறப்பட்ட நிதியைக் கொண்டு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்ட மீனவர்கள் மற்றும் மீன்பிடிச் சங்கங்களின் உறுப்பினர்களைச்சந்தித்து சிறு கூட்டங்களை நடத்தும் அந்தக் கட்சியின் யாழ்ப்பாண வேட்பாளர். அடுத்த அமைச்சரவையில்தானே கடற்றொழில் அமைச்சர் என்று கூறுவது பங்காளிக் கட்சிகளுக்கு விசனத்தையும் சீற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது. தாங்கள் ஒரு பக்கம் தமிழ்த் தேசியம் பேசி வாக்குக் கேட்க, இவர் மறுபக்கத்தில் ஆளும்தரப்போடு சேர்ந்து போவோம் என்ற மாதிரி வாக்குக் கேட்பது காட்டிக்கொடுப்புக்கு ஒப்பானது என்று பங்காளிகள் கோபப்படுகின்றனர்.

இதனால் அந்த வேட்பாளரின் கட்சியைச் சேர்ந்த யாழ். மாவட்டக் கிளையின் பெரும்பான்மையானவர்களும் பங்காளிக் கட்சிகளும் அந்த வேட்பாளருடன் சேர்ந்து பரப்புரைப் பணிகளில் ஈடுபடப்போவதில்லை என்று கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கின்றன. அவரும் இதுவரையில் தனியாகத்தான் பரப்புரைகளில் ஈடுபட்டு வருகின்றார். இந்தத் தேர்தலில் தமது கூட்டணிக்குள் இந்தமுறை தானே நாடாளுமன்றம் செல்வேன் என்றும் அமைச்சராவேன்என்றும்கூறிவருகின்றாராம். இதனால் ஏற்பட்ட கோபத்தின் உச்சியில் இருக்கும் அவரது கட்சியின் உறுப்பினர்களே, தலையில் மயிரை நட்டது போல தமிழ் மக்களுக்குள் தன்னை நடலாம் என்று நினைக்கிறார் போல என்று சீறுகிறார்கள்.

.........................

ஒக்டோபர் 21 எனது பத்தியில் பனை அபிவிருத்திச் சபையின் தலைவராக நியமிக்கப்படும் செல்வினுக்கு எதிர்ப்புத் தெரிவித்து சபையின் ஊழியர் சங்கம் அமைச்சர் விஜித ஹேரத்துக்கு எழுதிய கடிதம் குறித்துத்தகவல்தெரிவித்திருந்தேன். எனினும் அந்தக் கடிதத்தைப் பொருட்படுத்தாமல் செல்வினுக்குநியமனம்வழங்கப்பட்டுவிட்டது.

அந்த பதிவு குறித்து பனை அபிவிருத்திச் சபையின் செயலாளர் அமைச்சருக்கு ஒரு விளக்கம் அனுப்பி வைத்திருக்கிறார். அதன் பிரதியை எமக்கும் அனுப்பி வைத்திருக்கிறார்.

அதில், சபையால்கொள்வனவுசெய்யப்பட்ட 3 வெல்ல உற்பத்தி இயந்திரங்களுக்கும் புதிய தலைவரான செல்வினுக்கும் தொடர்பு ஏதும் இல்லை என்று தெரிவித்துள்ளார். இந்த இயந்திரங்கள் 2017இல் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன, ஆனால், செல்வின் சபையின் வேலைப் பணிப்பாளராக 2018 மே மாதமே நியமனம் பெற்றார் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வேலைப் பணிப்பாளராக இருந்த சமயம் செல்வின் சபையின் வாகனத்தை தானே ஓட்டிச் சென்று விபத்துக்குள்ளாக்கியமை தொடர்பாகவும் அந்தக் கடிதத்தில் விளக்கமளிக்கப்பட்டுள்ளது. சாரதி வருகை தராத (விடுப்பு) காரணத்தால் நிகழ்வு ஒன்றுக்குச் செல்வதற்காக செல்வின் சபை வாகனத்தை தானே ஓட்டிச் சென்ற சமயம் விபத்து இடம்பெற்றதென்றும் அது தொடர்பாக உரிய முறையில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றும் சபையால் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழுவும்உரியவிசாரணைகளை நடத்தி அதன் முடிவுப்படி விபத்துக்குள்ளான வாகனத்தைத் திருத்துவதற்கான செலவின் ஒரு பகுதி செல்வினால் பொறுப்பேற்கப்பட்டது என்றும் வாகனம் திருத்தப்பட்டு இப்போது சபையின் பயன்பாட்டில் இருக்கின்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போயுள்ளதாகவும், அதன் பின்னர் 22 வாகனங்கள் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஜனாதிபதி செயலகத்தின் போக்குவரத்துப் பிரிவின் பணிப்பாளரான மகேஷ் ஹேவாவிதாரண குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டு ஏறக்குறைய ஆறரை மணித்தியாலங்கள் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. எனினும் காணாமல்போன வாகனங்கள் தொடர்பிலான விசாரணைகளைத் தொடர்வதற்கான முக்கிய தகவல்கள் எதுவும் அவரது வாக்குமூலத்தில் இருந்து பெறப்படவில்லை என்று அறியமுடிந்தது.

தான் போக்குவரத்து பணிப்பாளராகப் பதவியேற்றநாள் முதல் கோப்புகள் முறையாக பராமரிக்கப்பட்டு வருவதாகவும் பழைய கோப்புகளைக் கண்டுபிடிக்க முடியாத நிலை உள்ளதாகவும், ஆனால் அவற்றைக் கண்டுபிடிக்க மூன்று வாரங்கள் கால அவகாசம் வழங்கும்படி கோரினார் என்றும் தெரியவந்துள்ளது.

போக்குவரத்துஇயக்குநரின் அறிக்கையில் காணாமல்போன வாகனங்கள் தொடர்பான முக்கியத்தகவல்கள்எதுவும்வெளியாகவில்லை என்றும், ஆனால்மாற்றுவழிகளில்காணாமல் போனவாகனங்களைக் கண்டுபிடிப்பதற்கான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் மூத்த காவல்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## துப்பாக்கிச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

துப்பாக்கிச் சன்னம் தாக்கிக் காயமடைந்த கொனபொல, கும்புக வடக்குப் பகுதியைச் சேர்ந்த 36 வயது விவசாயி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர் தனது தந்தை மற்றும் சகோதரருடன் கும்புக சமரநாயக்கபுர அலுட் வீதி வயல்வெளியில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தபோது துப்பாக்கிச் சன்னங்களால் காயம் ஏற்பட்டது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

எக்ஸ்ரே சோதனையில் அவரது கையில் ரி-56 ரக துப்பாக்கியின் தோட்டா கையில் இருந்தது அவதானிக்க முடிந்ததாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

அறுவைச் சிகிச்சை மூலம் துப்பாக்கிச் சன்னம் அகற்றப்பட்டு அவருக்குச் சிகிச்சை வழங்கப்படுவதாக மருத்துவமைன செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

## ஷானி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வொன்று நியமிக்கப்பட்டது. உயர்நீதிமன்ற நீதியரசர்விஜிதமலல்கொட, முன்னாள்பொலிஸ் மா அதிபர் இளங்கோன் தலைமையில் இந்தக் குழு நியமிக்கப்பட்டது. இக்குழுவின் ஆரம்பகட்ட விசாரணைகளுக்கமைய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

இவை தவிர முன்னாள் ஜனாதிபதியால் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. நீதியரசர்கள் நால்வர் உள்ளிட்ட ஐவரடங்கிய இந்த ஆணைக்குழு தனியான விசாரணைகளை முன்னெடுத்தது. எவ்வாறிருப்பினும் பல்வேறு அரசியல் காரணிகளால் அந்த விசாரணைகளை முன்னெடுத்த அதிகாரிகளுக்கு இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டன. இதனால்கத்தோலிக்கச்சபை சார்பில் அருட்தந்தை சிறில் காமினி முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

கடந்த ஜூன் மாதம் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டது. கேகாலை மேல் நீதிமன்றத்தின் நீதவான் ஜயகீத் அஸ்விஸ் மற்றும் நயனா சோமரத்ன உள்ளிட்டோர் தலைமையில் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டது. அத்தோடு சனல் 4 செய்தி சேவை வெளியிட்ட காணொளி தொடர்பில் விசாரிப்பதற்கும் குழுவொன்று நியமிக்கப்பட்டது. இந்த இரு குழுக்களாலும் இரு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன. இவை இரண்டும் முழுமையான அதிகாரம் கொண்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்கள் இல்லை.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் சுப்பர் ஸ்டாராக வேண்டும் என்று விரும்பும் உதய கம்மன்பிலவே இந்த குழுக்களின் அறிக்கைகளை பெரிதாகப் பேசிக் கொண்டிருக்கின்றார். இந்தக் குழுக்களின் அறிக்கைகளிலுள்ள சாதகமான விடயங்கள் தொடர்பில் எமது விசாரணைகளின்போதும் கவனத்தில் கொள்ளப்படும்.

ஜூலை 12ஆம் திகதி இந்தக் குழு நியமிக்கப்பட்டு 3 மாதங்களில் அறிக்கையை சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டது. செப்டெம்பர் 15ஆம் அதாவது தேர்தலுக்கு ஒரு வாரத்துக்கு முன் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. இந்தக் குழுவின் தலைவர் யார் என்பது தொடர்பில் ஆராய்ந்தபோது வெட்கப்பட வேண்டியேற்பட்டது. ஏ.என். அல்விஸ் என்பவர் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகிப் பதவி விலக்கப்பட்டவராவார்.

அவ்வாறான ஒருவரின் அறிக்கை தொடர்பில் எம்மால் கவனத்தில் கொள்ள முடியாது. இந்த அறிக்கையின் பரிந்துரைகளுக்கேற்ப ஷானி அபேசேகர மற்றும் ரவி செனவிரட்ண ஆகியோர் மீது நடவடிக்கை எடுத்து உதய கம்மன்பிலவின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதற்கு ஆளும்தரப்புத் தயாராக இல்லை என்றார்.

# விசா இன்றி யுஏஈயில் இருக்கும் இலங்கையர்கள் கவனத்திற்கு

ஐக்கிய அரபு இராச்சியத்தினால் (யுஏஈ) அறிவிக்கப்பட்டுள்ள பொதுமன்னிப்பு காலம் எதிர்வரும் 31ஆம் திகதியுடன் நிறைவடைவதாக அங்குள்ள இலங்கை துணைத் தூதரகம் அறிவித்துள்ளது.

இதனால் வெளியேறும் சான்றிதழை வழங்க குறிப்பிட்ட காலம் தேவைப்படுவதால் செல்லுபடியாகும் விசா இல்லாத அல்லது விசா இல்லாத இலங்கையர்கள் ஒக்டோபர் 25 அல்லது அதற்கு முன்னர் இலங்கைக்கு பயணிக்க விரும்பும் தற்காலிக பயண ஆவணத்திற்கு விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பொது மன்னிப்பு காலத்தில் உதவிகளை மேற்கொள்ள தூதரகம் தயாராகவுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஐக்கிய அரபு இராச்சியத்தில் விசா இன்றி தங்கியுள்ள இலங்கையர்கள் குறித்த பொதுமன்னிப்பு காலத்தை பயன்படுத்தி சட்டரீதியான விசாவைப் பெற்றுக்கொள்ள முடியும்.

அதனை மேற்கொள்ள முடியாதவர்கள் பொதுமன்னிப்பு காலத்தை பயன்படுத்தி மீண்டும் இலங்கைக்கு செல்ல முடியுமெனவும் துணைத் தூதரகம் அறிவித்துள்ளது.

# சீனத் தூதரகப் பிரதானி நேற்று ஜனாதிபதி செயலருடன் சந்திப்பு

சீனத் தூதரகத்தின் பிரதிப் பிரதானி சூ யன்வெய் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவை நேற்று ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்தார்.

சீனா- இலங்கை இருதரப்பு உறவுகளை பல்வேறுதுறைகளில்மேலும்விரிவுபடுத்துவது குறித்துஇந்தசந்திப்பில்விரிவாகஆராயப்பட்டது.

அத்துடன், சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால நட்புறவு மற்றும் பரஸ்பர மரியாதை என்பன குறித்து இதன்போது நினைவுகூரப்பட்டதுடன், இரு நாடுகளுக்கும் இடையிலான சமூக, கலாசார மற்றும் பொருளாதார உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கான புதிய வழிமுறைகள் குறித்தும் ஆராயப்பட்டது.

## நடமாடும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானித்துள்ளது.

தேங்காய் விலை அதிகரிப்பினால் நுகர்வோர் எதிர்நோக்கும் சிரமங்களுக்குத் தீர்வாக இந்த வேலைத்திட்டம் நடைமுறைப் படுத்தப்படுகிறது.

அதன் முதல் கட்டம் கொழும்பு, ஸ்ரீ ஜயவர்தன புர கோட்டே, கடுவெல மாநகர சபை பிரதேசங்களை அடிப்படையாகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு எல்லைக்குட்பட்ட வெலிக்கடை பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையிலும், கிருலப்பனை பொதுச் சந்தைக்கு அருகாமையிலும் மற்றும் நிதி அமைச்சின் வளாகத்திற்கு அருகாமையிலும் நடமாடும் லொறிகள் மூலம் தேங்காய் விற்கப்படும்.

ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபைக்குட்பட்ட வெலிக்கடை பொலிஸ் நிலையத்திற்கு அருகிலும் நுகேகொட ஆனந்த சமரகோன் எலிமஹன் ரங்க பீடத்திற்கு அருகிலும் நடமாடும் தேங்காய் விற்பனை இடம்பெறும்.

கடுவெல மற்றும் பத்தரமுல்லை அதிகார வரம்புகளை உள்ளடக்கி, செத்சிரிபாய அரச அலுவலக வளாகம் மற்றும் டென்சில் கொப்பேகடுவ தென்னை பயிர்ச்செய்கை சபைக்கு அருகிலுள்ள இடம் என்பவற்றில் தேங்காய்களை கொள்வனவு செய்வதற்கான வசதிகளை தென்னைச் செய்கை சபை ஏற்கனவே வழங்கியுள்ளது.

அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கியவகையில்இந்தவேலைத்திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளதாக தென்னை பயிர்ச்செய்கை சபை தெரிவித்துள்ளது.

தென்னை பயிர்ச்செய்கை சபையினால் தினமும் பத்தாயிரம் தேங்காய்கள் சந்தையில் விற்பனைக்கு விடப்படும். திங்கள், புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் வாரத்திற்கு 15,000தேங்காய்கள்சந்தைக்குஅனுப்பப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜனாதிபதியின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும்ஆராயப்பட்டதுடன், திட்டப்பணிகளை உரிய நேரத்தில் நிறைவுசெய்வதற்காக அந்தப் பணிகளை விரைவுபடுத்த வேண்டியதன் அவசியம் குறித்தும் ஆராயப்பட்டது.

## இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்குவதாக அறிவித்தது.

கட்சியின்அங்கீகரிக்கப்பட்டஅதிகாரியும்சிறீ ரெலோ கட்சியின் தலைவருமான உதயராசா மற்றும் இரண்டு வேட்பாளர்களினால் இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனுவை விசாரணைக்கு உட்படுத்தித் தீர்ப்பு அறிவிக்கப்படும் வரை வன்னி மாவட்டத்திற்கான பொதுத் தேர்தல் வாக்கெடுப்பை நவம்பர் 14 நடாத்துவதற்கு இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டுமெனவும் அந்த மனுவில் மேலும் கோரப்பட்டிருந்தது.

காலைக்கதிர் Kalaikkathir

## உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள்:

# ராஜபக்சர்கள் மீது பொறுப்பைச் சுமத்த ஒருசில மத தலைவர்கள் முயற்சியாம்



உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் சம்பவத்தின் பொறுப்பினை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின்தலைவர்கள்மீதுசுமத்த ஒருசிலமதத்தலைவர்களும், அரசியல் கட்சிகளும் முயற்சிக்கின்றன.

இமாம் அறிக்கையையும் எதிர்பார்த்துள்ளோம் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

ஸ்ரீலங்காபொதுஜனபெரமுனவின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது -

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தற்போதைய பிரதான பேசுபொருளாக காணப்படுகிறது. அதிகாரத்தை கைப்பற்றுவதற்காகவே குண்டுத்தாக்குதல்கள் நடத்தப் பட்டதாகவும் பல குற்றச்சாட் டுக்கள் முன்வைக்கப்பட்டன.

குண்டுத்தாக்குதல்களின் பொறுப்பை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் மீது பொறுப்பாக்குவதற்கு ஒருசில மத தலைவர்களும், அரசியல் கட்சிகளும் ஆரம்பத்தில் இருந்து பல முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2019 ஆம் ஆண்டு குண்டுத்தாக்குதல்கள் நடத்தப்பட்டன. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 2018 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத்தேர்தலில் தனது அரசியல் பலத்தை உறுதிப்படுத்தியது.

ஆகவே அரசியலுக்காக குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டது என்று முன்வைக்கும் குற்றச்சாட்டை ஏற்றுக் கொள்ள முடியாது.

குண்டுத்தாக்குதல்கள் குறித்து புலனாய்வு பிரிவு முன்னெச்சரிக்கை விடுத்திருந்த சந்தர்ப்பத்தில் அதனை கருத்திற் கொள்ளாது தேசிய பாதுகாப்பை அலட்சியப்படுத்தியபொலிஸ்மற்றும்குற்றப்புலனாய்வு பிரிவின்உயர்அதிகாரிகள்தற்போதுபாதுகாப்புதரப்பின் உயர் அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

குண்டுத்தாக்குதல்கள் தொடர்பில் செனல் - 4 தொலைக்காட்சி பொய்யான ஆவணப்படத்தை வெளியிட்டது. செனல் 4 யுத்தகாலத்திலும்பொய்யான சித்திரிப்புக்களுடன் ஆவணப்படம் வெளியிட்டது.

ஆகவே இமாம் விசாரணை அறிக்கையை எதிர்பார்த்துள்ளோம். அல்விஸ் அறிக்கையை வெளியிட்ட உதய கம்மன்பிலவுக்கு நாட்டு மக்கள் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

தேசிய மக்கள் சக்தி இந்த குண்டுத்தாக்குதலை அரசியல் பிரசாரமாக்கியே ஆட்சிக்கு வந்தது. பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவளித்ததால் கத்தோலிக்கர்கள் ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவளித்தார்கள். ஆகவே நம்பிக்கையளித்த மக்களுக்கு நியாயத்தை வழங்குமாறு ஜனாதிபதியிடம் கேட்டுக் கொள்கிறோம். - என்றார்.(05)

# கம்மன்பில முன்வைத்த குற்றச்சாட்டுகளை நிராகரித்தது கத்தோலிக்கத் திருச்சபை

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் உதயகம்மன்பில முன்வைத்த குற்றச்சாட்டுகளை இலங்கையின் கத்தோலிக்க திருச்சபை நிராகரித்துள்ளது.

உதயகம்மன்பில வெளியிட்ட அறிக்கையில் இரண்டு அரசாங்க அதிகாரிகளிற்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை நிராகரித்துள்ளஇலங்கைகத்தோலிக்கதிருச்சபைதனது மறுப்பை உத்தியோகபூர்வமாக அறிவிக்கவுள்ளது.

நாங்கள் எங்களின் நிலைப்பாட்டினையும் கர்தினால்மல்கம்ரஞ்சித்திற்குஎதிராகஉதயகம்மன்பில வெளியிட்டுள்ள குற்றச்சாட்டுகள் குறித்த எங்களின்



பதில்களையும் வெளியிடுவோம் என அருட்தந்தை சிறில்காமினிபெர்ணாண்டோதெரிவித்துள்ளார். (05)

# மீகலேவ பிரதேச வைத்தியசாலையினுள் மனதை மகிழ்விக்கும் மரக்கறி தோட்டம்

குருணாகல் மாவட்டத்தின் வடமேற்கு மாகாணத்தில்அநுராதபுரமாவட்டத்திற்கும்குருணாகல் மாவட்டத்திற்கும் இடையிலான எல்லையில் அமைந்துள்ளமீகலேவபிரதேசவைத்தியசாலையில் நோயாளர்களின் மனநலத்தை பேணும் வகையில் மரக்கறிச் செய்கை முன்னெடுக்கப்படுகின்றது.

மீகலேவ பிரதேச வைத்தியசாலைக்கு பொறுப்பான வைத்திய அதிகாரி மஹிந்த உயங்கொட அவர்களின் பணிப்புரையின் கீழ் வைத்தியர் திலினி அபேவர்தன, வைத்திய சமிகா விக்கிரமசிங்க மற்றும் ஏனைய வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் வைத்தியசாலையின் ஏனைய ஊழியர்களின் உதவியுடன் இந்த மரக்கறிச்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்த நிலத்தில் ஏராளமான உருளைக் கிழங்கு, தக்காளி, முள்ளங்கி, கிழங்கு, வெண்டை, வாழை, மிளகாய், சோளம் போன்றவை பயிரிடப்பட்டுள்ளன.

வைத்தியசாலையில் பணிபுரியும் அனைத்து ஊழியர்களும் தங்களுக்கு கிடைக்கும் ஒவ்வொரு ஓய்வு நேரத்திலும் இந்த மரக்கறிச் செய்கையை மேற்கொண்டு வருகின்றனர். (05)

# அம்பாறையில் கைக்குண்டு மீட்பு : செயலிழக்கச் செய்ய நடவடிக்கை

கட்டட வேலைக்காக கொட்டப்பட்ட மண்ணுக்குள் இருந்து மீட்கப்பட்ட கைக்குண்டை செயலிழக்கச் செய்ய விசேட அதிரடி படையினரால் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ்



பிரிவிற்குட்பட்ட வீடு ஒன்றில் திங்கட்கிழமை மாலை கட்டட வேலைக்காக கொட்டப்பட்ட மண்ணில் புதையுண்ட நிலையில் குறித்த கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளது.

அத்துடன், குறித்த கட்டட வேலையில் ஈடுபட்டவர்கள் 119 எனும் பொலிஸ் அவசர பிரிவுக்கு தகவல் வழங்கியதை தொடர்ந்து சம்பவ இடத்திற்கு விரைந்த சம்மாந்துறை பொலிஸார் கைக்குண்டுடை பார்வையிட்டதுடன் குண்டு செயலிழக்கும் விசேட அதிரடி படையினர் மற்றும் குற்றவியல் தடயவியல் பொலிஸார் வரவழைக்கப்பட்டு மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மீட்கப்பட்ட கைக்குண்டை அவ்விடத்தில் இருந்து அகற்றி செயலிழக்கம் செய்வதற்காக செவ்வாய்க்கிழமை சம்மாந்துறை நீதிவான் நீதிமன்ற கட்டளையை பெற்று மேலதிக விசாரணைகளை சம்மாந்துறைபொலிஸார்மேற்கொண்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# தெல்லிப்பழை பற்றைக்குள்ளிருந்து பொலிஸாரால் சொகுசுக் கார் மீட்பு



யாழ்ப்பாணம் தெல்லிப்பழை பகுதியில்பற்றைக்காடொன்றில்இருந்து சொகுசு கார் ஒன்று பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

பற்றைக்காடு ஒன்றினுள் சொகுசு கார் ஒன்று மறைத்து வைக்கப்பட் டுள்ளதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் காரை மீட்டு பொலிஸ் நிலையம் கொண்டு சென்றுள்ளனர்.

பொலிஸ் நிலையத்தில் காரின் இலக்கதகட்டின்பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த வேளை , அது போலியானது என தெரிய வந்துள்ளது. அத்துடன் காரில் இருந்த ஆவணங்களும் போலியானவை என்பது தெரிய வந்துள்ளது.

குற்றச்செயல்களுடன் தொடர் புடைய காராக இருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். கார் தொடர்பானமேலதிகவிசாரணைகளை பொலிஸார்முன்னெடுத்துள்ளனர். (05)

## 10 மாதங்களில் மட்டும்

# 4,126 டெங்கு நோயாளர்கள் மத்திய மாகாணத்தில் பதிவு




மத்திய மாகாணத்தில் 2024ஆம் ஆண்டில் கடந்த பத்து மாதங்களில் 4,126 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தின் முதல் 40 வாரங்களில்கண்டி மாவட்டத்தில் 3,435 டெங்கு நோயாளர்களும் மாத்தளை மாவட்டத்தில் 532 நோயாளர்களும் நுவரெலியா மாவட்டத்தில் 159 டெங்கு நோயாளர்களும் பதிவாகியுள்ளதாக அந்த பிரிவுமேலும் தெரிவித்துள்ளது.

தற்போது மத்திய மாகாணத்தில் பெய்து வரும் மழைகாரணமாக டெங்கு நோய் வேகமாக பரவும் அபாயம் உள்ளதால், மக்கள் விழிப்புடன் இருந்து சுற்றுச்சூழலை டெங்கு நுலம்புகளற்றதாக பராமரிக்குமாறு சுகாதார அதிகாரிகள் மக்களிடம் கேட்டுக் கொள்கின்றனர்.

(05)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மக்களின் எதிர்பார்ப்பு

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் தமது ஆட்சியில் மீண்டும் ஒரு முழுமையான விசாரணை நடத்தப்படும் என்று அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்திருக்கின்றார். இந்தத் தாக்குதல் தொடர்பில் இரு குழுக்கள் வழங்கிய அறிக்கைகளில் ஒன்றை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில வெளியிட்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட சர்ச்சைகளுக்குப் பதிலளிக்கும் விதத்தில் அவர் இதனைக் கூறியிருக்கின்றார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் முதலில் விசாரணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டது. உயர்நீதிமன்ற நீதியரசர் விஜித மலல்கொட, முன்னாள் பொலிஸ் மா அதிபர் இலங்ககோன் தலைமையில் இந்தக் குழு நியமிக்கப்பட்டது. இக்குழுவின் ஆரம்பகட்ட விசாரணைகளுக்கமைய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

இவை தவிர முன்னாள் ஜனாதிபதியால் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. நீதியரசர்கள் நால்வர் உள்ளிட்ட ஐவரடங்கிய இந்த ஆணைக்குழு தனியான விசாரணைகளை முன்னெடுத்தது. எவ்வாறிருப்பினும் பல்வேறு அரசியல் காரணிகளால் அந்த விசாரணைகளை முன்னெடுத்த அதிகாரிகளுக்கு இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டன.

இவையெல்லாம் வரலாறுகள். ஆனால், இந்தக் குழுக்களின் அறிக்கைகள் பகிரங்கப்படுத்தப்படவில்லை, அல்லது பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி முழுமையான அறிக்கைகள் பகிரங்கப்படுத்தப்படவில்லை. அத்தோடு இந்தக் குழுக்களின் பரிந்துரைகளையும் செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இதனால் கத்தோலிக்கச் சபை சார்பில் அருட்தந்தை சிறில் காமினி முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் முழுமையான மீள் விசாரணை ஒன்று நடத்தப்பட்டு அதன் பின்னணியில் இருக்கும் உண்மைக் குற்றவாளிகள் கண்டறியப்படவேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தார்.

திருச்சபையின் அழுத்தம் காரணமாகவும், அரசுத் தலைவர் தேர்தல் நெருங்கி வந்த காரணத்தாலும் 2024 ஆனி மாதம் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டது. கேகாலை மேல் நீதிமன்றத்தின் நீதவான் ஜயகீத் அஸ்விஸ் மற்றும் நயனா சோமரத்ன உள்ளிட்டோர் தலைமையில் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டது. அத்தோடு சனல் 4 செய்தி சேவை வெளியிட்ட காணொளி தொடர்பில் விசாரிப்பதற்கும் குழுவொன்று நியமிக்கப்பட்டது. இந்த இரு குழுக்களாலும் இரு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன. அந்த அறிக்கைகளில் ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களையே கம்மன்பில இப்போது வெளிப்படுத்தியுள்ளார்.

இவை இரண்டும் முழுமையான அதிகாரம் கொண்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்கள் இல்லை என்று தெரிவித்திருக்கும் அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் விஜித ஹேரத், தமது ஆட்சியில் முழுமையான மீள்விசாரணை ஒன்று நடத்தப்படும் என்று அறிவித்திருக்கிறார்.

இலங்கையின் வரலாற்றில் இத்தகைய மீள் விசாரணைகளும் ஆணைக்குழு விசாரணைகளும் காலத்தைக் கடத்துவதற்கும் இழுத்தடிப்பதற்குமான உத்திகளாகவே பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. உண்மையான நடவடிக்கைகளாக அவை இருந்ததில்லை. தமிழர்களுக்கு எதிரான மனித உரிமைகள் விடயத்தில்கூட பன்னாட்டு விசாரணை ஒன்றுக்கு ஒத்துழைக்காமல் உள்நாட்டில் உண்மையைக் கண்டுபிடிப்போம் என்று தேசிய மக்கள் சக்தி ஆட்சியாளர்கள் கூறுவதுகூட இவ்வாறான ஒரு காலங்கடத்தல் உத்திதான். அப்படிப்பட்ட ஆட்சியாளர்கள் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விடயத்திலாவது அப்படி நடந்துகொள்ளாமல் இருக்கவேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பு.

# இஸ்ரேல் எப்படிப் போரிடுகிறது?

மஹிரா சர்ஃபராஸ்



நவீனத்தொழில்நுட்பம், செயற்கைநுண்ணறிவு ஆகியவற்றின் உதவியுடன் மத்திய கிழக்கில் ஓராண்டாகப் போரிட்டு வருகிறது இஸ்ரேல். கடந்த செப்டெம்பர் மாதம் ஆயிரக்கணக்கான பேஜர்கள் அடுத்தடுத்து வெடித்து, லெபனானில் மிகப் பெரிய உயிரிழப்புகளும் ஆயிரக்கணக்கானோருக்குக் காயங்களும் ஏற்பட்டன. அந்தத் தாக்குதலை, அதற்கும் சில மாதங்களுக்கு முன்பிருந்தே திட்டமிட்டு செயல்படுத்தியது இஸ்ரேல்.

203 ஒக்டோபர் 7 'ஹமாஸ்' இயக்கம் நடத்திய திடீர் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கப் புறப்பட்ட இஸ்ரேல் தனது வேகத்தை இதுவரை குறைத்துக்கொள்ளவில்லை, தாக்கும் இலக்குகளையும் அதிகரித்துக்கொண்டே வருகிறது. இப்போது லெபனானில் 'ஹெசபொல்லா' அமைப்புடனும் 'காஸா' நிலப்பரப்பில் 'ஹமாஸ்' இயக்கத்தவருடனும் ஏமனில் 'ஹூதி' அமைப்புடனும் போரிட்டுவருகிறது. "ஹமாஸ் இயக்கத்தவரை மட்டும்தான் குறிவைத்துத் தாக்குகிறோம், இலக்குகள் மீது துல்லியமாக குறிவைக்கிறோம்" என்று இஸ்ரேல் கூறிக்கொண்டாலும் அப்பாவி பொதுமக்கள் உடன் இறப்பது அதிகரித்துவிட்டது.

காஸாவில் இதுவரை 41,000க்கும் மேற்பட்டோர் இறந்துவிட்டனர், ஏராளமானோர் படுகாயம் அடைந்துள்ளனர். வீடுகள், வணிக நிறுவனங்கள், பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகள், மக்களுக்கு உணவு- குடிதண்ணீர் வழங்கும் இடங்கள் என்று எதுவுமே இந்தத் தாக்குதலில் விட்டுவைக்கப்படவில்லை. தாக்க வேண்டிய இலக்குகளை இஸ்ரேல் இராணுவம் எப்படித் தேர்வுசெய்கிறது, தாக்குதலுக்கு அது எப்படிப்பட்ட தொழில்நுட்பங்களைக் கையாள்கிறது?

### முதலாவது 'எண்ம' போர்

இஸ்ரேல் இராணுவத்தின் கணினி, தகவல்தொடர்பு அலகு உள்ள மையத்தின்




தலைமை (பெண்) தளபதி ரச்சேலி டெம்பின்ஸ்கி, இந்தத் தாக்குதல்களை 'முதலாவது எண்ம (டிஜிட்டல்) போர்' என்கிறார். 'காஸாவில் நாங்கள் நடத்திய தாக்குதல்களை இந்த மையத்திலிருந்து மிகச் சில படையினரே மடிக்கணினி (லேப்-டாப்) உதவியுடன் செய்தனர்' என்கிறார்.

டெம்பின்ஸ்கி வெளியிட்டுள்ள யூட்யூப் காணொலியில் மிகப் பெரிய பன்னாட்டுத் தொழில்நுட்ப நிறுவனங்களின் இலச்சினைகள் தெரிகின்றன. மைக்ரோசாஃப்ட் அசூர், கூகுள் கிளவுட், அமேசான் வெப் சர்வீசஸ் (ஏடபிள்யுஎஸ்) என்று இன்னும் பல. அதில் சில மிகப் பெரிய தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுடன் ஒப்பந்தம்செய்துகொண்டு பல நாடுகள், மனிதர்கள் பற்றிய தரவுகளைப் பெற்று இந்தப் போரை நடத்துகிறது இஸ்ரேல். தரவுகளைச் சேமித்துவைக்கும் இடத்தை 'கிளவுட்' என்று அழைக்கின்றனர். வெவ்வேறு 'கிளவுட்கள்' பயன்படுத்தப்படுகின்றன. பாலஸ்தீனர்களைக் கண்காணிக்கவும் தேவைப்பட்டால் தாக்கவும் இந்தத் தரவுகளைப் பயன்படுத்துகிறது இஸ்ரேல்.

### எளிதில் சிக்காத '8200' பிரிவு

எதிரி நாடுகளைக் கண்காணிக்க மிகவும் இரகசியமாகச் செயல்படும் '8200' என்ற அலகை இஸ்ரேல் ராணுவம் பயன்படுத்துகிறது. இது 'சைபர்' தொழில்நுட்பத்தில் மிகவும் தேர்ச்சி பெற்றது. இஸ்ரேலுக்குத் தேவைப்படும் தகவல்களில் 90% இந்த '8200' மூலமே பெறப்படுகிறது என்று 'ஃபோர்பஸ்' அறிக்கை தெரிவிக்கிறது. இந்த உளவுப் படையின் ஆதிக்கம், பக்கத்தில் உள்ள எல்லா நாடுகளிலும் விரிந்து பரந்திருக்கிறது.

'8200' என்பதற்கு ஹீப்ரு (யூத) மொழியில், 'ஷுமோன் மதாயிம்' என்று பொருள். இது இஸ்ரேலிய ராணுவ உளவு இயக்குநரகத்தின் கீழ் வேலை செய்கிறது. லெபனானில் ஆயிரக்கணக்கில் பேஜர்கள் வெடித்தபிறகுதான் இந்த அமைப்பு மீது அனைவரின் கவனமும் குவிந்தது. இந்த அலகின் வேலைகள் மிகவும் இரகசியமானவை. இது தங்களுக்குள் சங்கேதமான குறிப்புகளைப் பரிமாறிக்கொள்வதுடன் எதிரிகள் தொடர்பான அனைத்துத் தரவுகளையும் எல்லா இடங்களிலிருந்தும் கறந்துவிடும். தேவைப்பட்ட நேரத்தில் நவீனத் தொழில்நுட்ப உதவியுடன் துல்லியமாகத் தாக்கும் என்கிறது 'ராய்ட்டர்ஸ்'.

### ஆட்கள் தேர்வு

இந்தப் பிரிவுக்கு மிகவும் இளவயதில் உள்ளவர்கள்தான், குறைந்த எண்ணிக்கையில் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். உயர்நிலை பள்ளிக்கூடங்களில் படிக்கும்போதே யாரெல்லாம் அறிவியல் -தொழில்நுட்பத்தில் ஆர்வமும் நல்ல தேர்ச்சியும் பெற்றுத் திகழ்கிறார்கள் என்று கல்வித் துறை உதவியுடன் அடையாளம் கண்டு இராணுவத்துக்குத் தேர்வுசெய்கிறார்கள். இந்தப் போர் முடிந்ததும் இந்த இளைஞர்கள் உயர் தொழில்நுட்பங்களைப் படிக்க அனுப்பப்படுவார்கள்,

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# இஸ்ரேல் எப்படிப் போரிடுகிறது?

4ம் பக்க தொடர்ச்சி...........

'சைபர்' பிரிவு பாதுகாப்புப் பணியில் அதன் பிறகு நிரந்தரமாக்கப்படுவார்கள்.

'பாலஸ்தீனத்தில் தாக்குவதற்கான இலக்குகளைச் செயற்கைநுண்ணறிவுஉதவியுடன்தான்தேர்ந்தெடுத்தோம்' என்று இந்தப் பிரிவின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். 'மோதல்கள் தொடங்கிய உடனேயே 'ஹமாஸ்' இயக்க உறுப்பினர்கள் தப்பிவிடாதபடிக்குச் சிக்கவைக்க 'லாவண்டர்' என்ற பெயரில் செயற்கை நுண்ணறிவு வழிமுறையைக் கடைப்பிடித்து மடக்கினோம்' என்றார் அவர்.

### லாவண்டர் செய்த வேலை

'ஹமாஸ்' இயக்கத்துடன் மோதல் தொடங்கிய உடனேயே 'லாவண்டர்' முடுக்கிவிடப்பட்டது. அது கோடிக்கணக்கான தகவல்களைத் தன்னுள்ளே வைத்திருக்கிறது. இராணுவம் தாக்க வேண்டிய இலக்குகளை அது ஆயிரக்கணக்கில் கொட்டத் தொடங்கியது. முதலில் இஸ்ரேலிய தரைப்படை எங்கெல்லாம் தாக்கவேண்டும் என்பதை அது தெரிவித்தது. அதுவரை இருந்திராத வகையில் 'காஸா' நிலப்பகுதி மீது ஏவுகணைகள், பீரங்கிகள் மூலம் பெரிய தாக்குதல் நிகழ்த்தப்பட்டது.

ஒரு பாலஸ்தீனருக்கும் ஹமாஸுக்கும் இடையிலான நெருக்கம் எப்படிப்பட்டது என்பதைத் தெரிவிக்க, ஒன்று முதல் நூறு வரை ஒவ்வொருவருக்கும் எண் தரப்பட்டது. எண் குறைவாக இருந்தால், அவர் அவ்வளவு நெருக்கமில்லை என்று பொருள்.

அதிக எண்ணிக்கை உள்ளவர்களைக் கொல்ல முடிவெடுப்பதற்கு 'லாவண்டர்' உதவியது. 'ஹமாஸ்' இயக்கத்துடன் மேலோட்டமான தொடர்பில் இருந்தவர்கள், தொடர்புகொள்ளாமலேயே இருந்தவர்களையும் 'லாவண்டர்' தரவுகளாகத் திரட்டிவைத்தது. காரணம் ஒரே பெயரில் பலர் இருந்ததால், நெருங்கிய தொடர்புள்ளவரை விட்டுவிட்டு தொடர்பில்லாதவரைக் கொன்றுவிடக்கூடாது என்று இந்தமுறை கடைப்பிடிக்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளனர்.

### 90% துல்லியம்

ஹமாஸுடன் நெருங்கிய தொடர்புள்ளவர்களை, இந்தத் தரவுகள்மூலம்90%துல்லியமாகத்தேர்வுசெய்ததாகஇஸ்ரேல் ராணுவம் கூறியிருக்கிறது. (ஆனால் ஆயிரக்கணக்கான பெண்கள், குழந்தைகள், அப்பாவிகள்தான் இறந்துள்ளனர்). 2021 முதலே ஹமாஸ் போன்ற இயக்கங்களுடன் தொடர்புள்ளவர்கள் குறித்த தரவுகளை ஒருநாளைக்கு 100 பேர் என்று பதிவிறக்கம் செய்துகொண்டதாக, அவிவ் கொச்சாவி என்ற இஸ்ரேலிய இராணுவ அதிகாரி தெரிவித்துள்ளார்.




'லாவண்டர்' இல்லாமல், இஸ்ரேலிய இராணுவத்தால் ஒருநாளைக்கு 50 பேரைப் பற்றிய தரவுகளைத்தான் அதற்கும் முன்னால் பதிவிறக்கம் செய்ய முடிந்திருக்கிறது. 'லாவண்டர்' அந்த வேகத்தை இரட்டிப்பாக்கியிருக்கிறது. பாலஸ்தீனர்களின் முகம் உள்ளிட்ட உடல் அமைப்புகள், அவர்கள் வசித்த வீடு, அவர்கள் சென்றுவரும் பாதை, அவர்கள் அடிக்கடி செல்லும் இடங்கள், அவர்கள் சந்திக்கும் நபர்கள், அவர்கள் தொடர்புகொண்ட முகமைகள், முகாம்கள், மையங்கள் ஆகியவையும் தொகுக்கப்பட்டுள்ளன. அத்துடன் அவர்களுடைய தொலைபேசி உரையாடல் போன்ற தகவல்தொடர்புகளும் இடைமறித்து ஒட்டுக் கேட்கப்பட்டன.

### நிபுணர்கள் ஏற்க மறுப்பு

செயற்கைத் தொழில்நுட்பம் உள்ளிட்டவை மூலம் 'ஹமாஸ்' இயக்கத்தவர்களை மட்டும்தான் இலக்கு வைத்துக் கொன்றோம் என்று இஸ்ரேலிய இராணுவம் கூறுவதில் உண்மையில்லை என்று இத்துறையைச் சேர்ந்த பிற நாட்டு நிபுணர்கள் கூறுகின்றனர். "ஹமாஸுக்கு இலக்கு வைத்தபோது அருகில் வசித்தவர்களும்கூட கொல்லப்பட்டுள்ளனர். அப்பாவி மக்களுடைய உயிர்ச் சேதம் குறித்து சிறிதும் கவலைப்படாமல் ஏராளமான குடும்பங்களைப் பூண்டோடு அழித்துவிட்டது இஸ்ரேல்" என்று பன்னாட்டு மன்னிப்புச் சபை தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியிருக்கிறது.

"ஒவ்வொரு வீதியாக குண்டுவீசி எல்லா வீடுகளையும் தரைமட்டமாக்கியிருக்கிறது, அவற்றில் வசித்த எல்லோருமே இறந்திருக்கின்றனர் அல்லது படுகாயம் அடைந்துள்ளனர், பொதுமக்கள் மீண்டும் அப்பகுதியில் வசிக்கவே முடியாத அளவுக்கு அடித்தளக் கட்டமைப்பு அனைத்துமே திட்டமிட்டு அழிக்கப்பட்டுவிட்டது" என்கிறது மனிப்புச் சபை அறிக்கை. இராணுவ இலக்குகளைத்தான் குறிவைத்தோம் என்கிறது இஸ்ரேல், ஆனால், தாக்குதல் நடத்தப்பட்டபோது ஒருவர்கூட அதை எதிர்த்து சண்டையிட்டதற்கான அடையாளமே அங்கு இல்லை என்று மன்னிப்புச் சபை சாடுகிறது.

### ஹப்ஸோரா

'லாவண்டர்' மட்டுமல்ல, 'ஹப்ஸோரா' என்ற செயற்கை நுண்ணறிவு சாதனத்தையும் பயன்படுத்தியது இஸ்ரேல். யூத மொழியில் 'ஹப்ஸோரா' என்றால் 'நற்செய்தி' என்று பொருள். 'லாவண்டர்' என்பது 'ஹமாஸ்' இயக்கத்துடன் தொடர்புள்ள தனிநபர்கள் பற்றியது, 'ஹப்ஸோரா' என்பது 'ஹமாஸ்' இயக்கம் தொடர்பாக தாக்கப்பட வேண்டிய கட்டடங்கள், வீடுகள், வளாகங்கள் போன்றவை.

இவ்விரு சாதனங்களும் இருந்தாலும் ஏன் மற்றவர்களும் தொடர்பில்லாதவர்களும் தாக்கப்பட்டார்கள் என்ற கேள்வி எழலாம். 'தஹியா' என்ற இஸ்ரேல் இராணுவக் கொள்கையே இதற்குக் காரணம்.

மக்களுடைய பயன்பாட்டுக்கான அடித்தளக் கட்டமைப்புகளை (குடிநீர், மின்சாரம், போக்குவரத்து வசதி, எரிபொருள், உணவு, மருத்துவ வசதி) போன்றவற்றை அழித்தால்தான் மக்கள், இஸ்ரேலிய இராணுவத்தை எதிர்ப்பதைவிட உள்ளாட்சி மன்ற நிர்வாகிகள் அல்லது பாலஸ்தீன ஆட்சியாளர்கள் மீது தங்களுடைய கோபத்தையும் அதிருப்தியையும் திருப்புவார்கள் என்பதற்காக இதைச் செய்திருக்கிறது.

இதை இஸ்ரேலியா·ராணுவமும் ஒப்புக்கொண்டிருக்கிறது. மோதல்கள் தொடங்கிய உடனேயே தாக்கப்படவேண்டிய

தொடர்ச்சி 6ம் பக்கம்...........



காலைக்கதிர்
Kalaikkathir

# இஸ்ரேல் எப்படிப் போரிடுகிறது?




4ம் பக்க தொடர்ச்சி..........

இலக்குகளை 'ஹப்ஸோரா' வேகமாக அடையாளம் காட்டியது, துல்லியமாகவும் அதிக எண்ணிக்கையிலும் உடனே தாக்குவதும் அவசியமாயிற்று என்று அது தெரிவித்தது.

### செலவைக் குறைக்க சிக்கனம்

"எல்லா இலக்குகளையும் இப்படி நவீன தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு, அதிக விலைக்கு விற்கப்படும் ஏவுகணைகளைக் கொண்டு தாக்கிவிடவில்லை. சில பகுதிகளில் வழிகாட்டல்களே இல்லாத ஏவுகணைக் குண்டுகளையும் பயன்படுத்தினோம், விலை குறைவான இவற்றால் இராணுவச் செலவை ஓரளவுக்குக் குறைத்தோம்" என்று ஓர் அதிகாரி தெரிவித்திருக்கிறார்.

'ஹமாஸ்' இயக்கத்துடன் தொடர்புள்ள, அதேசமயம் முக்கியமில்லாதவர்களைக் கொல்லும்போது அந்த இடத்தில் சிவிலியன்கள் இருந்தால் அவர்களும் இறக்கக்கூடும் என்பதால் தலைமைக்குத் தெரிவித்து ஒப்புதல் பெற்ற பிறகே சாதாரண குண்டுகளால் தாக்கினோம். சில இடங்களில் எங்களுடைய இலக்குடன் 15 முதல் 20 பேர் வரை சிவிலியன்களும் சேர்ந்தே இறந்தனர் என்கிறார் அந்த அதிகாரி. விலை அதிகமான குண்டுகள் பற்றாக்குறையாகவே இருக்கிறது என்றும் இன்னொரு அதிகாரி குறிப்பிட்டார்.

### 'அப்பா எங்கே?'

இஸ்ரேலிய இராணுவத்தின் உளவுப் பிரிவின் சேவை தனிநபர்கள், கட்டடங்கள் குறித்து தகவல்கள் சேகரித்ததுடன் நிறுத்தவில்லை. முக்கியமான சில பாலஸ்தீனர்களை அவர்களுடைய வீட்டு அடையாளத்துடன் தரவுகளாகப் பதிந்து வைத்திருக்கிறது. அந்தத் தரவுகளுக்கு 'வேர் ஈஸ் டாடி?' (அப்பா எங்கே) என்று சங்கேதப் பெயர். பாலஸ்தீனப் பகுதியில் வாழ்ந்தவர்களுக்கு 'ஹமாஸ்' இயக்கத்துடன் உள்ள தொடர்பு எப்படிப்பட்டது என்று வகைப்படுத்தினார்கள் என்று பார்த்தோம், அப்படி ஒவ்வொருவரையும் அடையாளம் காண, அவர்கள் வசிக்கும் வீட்டையும் குடும்பத்தையும் சேர்த்து தரவுகளில் பதிவிட்டார்கள். அந்தப் பதிவுக்குத்தான் 'அப்பா எங்கே?' என்று பெயர்.

தொலைவிலிருந்து தாக்குவதற்கு மட்டுமல்ல, இராணுவத்தினர் வீடு வீடாக நுழைந்து தேடுதல் வேட்டை நடத்தும்போது, அந்த வீட்டில் இருந்திருக்க வேண்டியவர் அங்கில்லை என்றாலும், 'அப்பா எங்கே?' என்று கேட்டு குடும்பத்தினரிடம் தகவல் பெற இந்தச் செயற்கை நுண்ணறிவு பயன்படுத்தப்பட்டது.

### மக்கள் உயிரிழப்பு தடுக்கப்பட்டதா?

'ஹமாஸ்' இயக்கத்தவருடன் தொடர்புள்ளவர்களைத் தாக்கும்போது அப்பாவிகள் இறப்பதைத் தடுக்க என்ன செய்தீர்கள் என்று 'கார்டியன்' நிருபர் கேட்டார்.

பெருந்தாக்குதலுக்கு முன்னால் அப்பகுதியில் வசிக்கும் மக்கள் அனைவருக்கும் ஆங்காங்கே அறிவிப்புகள் செய்தோம், வீட்டைக் காலிசெய்துவிட்டு பாதுகாப்பான இடம் நோக்கிச் செல்லுங்கள், இன்ன இடம் நோக்கிச் செல்லுங்கள் என்றெல்லாம் அறிவித்துவிட்டுத்தான் தாக்கினோம். அந்த அறிவிப்புகளுக்குப் பிறகு ஆயிரக்கணக்கானவர்கள் வாகனங்கள் மூலமும் நடந்தும் வெளியேறினார்கள் என்று ஓர் அதிகாரி பதிலளித்தார். இது உண்மையல்ல என்று பலரும் மறுக்கின்றனர். செயற்கை நுண்ணறிவு உதவியுடன் துல்லியமாகத் தாக்கினோம் என்பதும் பொய்யே என்றும் அவர்கள் சாடுகின்றனர்.

தான் கூறியதற்கு மாறாக, இராணுவம் அல்லாத இலக்குகள் மீதும் தாக்கும் அளவுக்கு இலக்குகளை விரிவுபடுத்தியதாக இஸ்ரேலியஈராணுவம் தனது அதிகாரப்பூர்வ இணையதளத்திலேயே ஒப்புக்கொண்டுமிருக்கிறது.

### மேலும் பல திட்டங்கள்!

இஸ்ரேலிய இராணுவம் இந்தத் தாக்குதல்களுக்கு மேலும் பல செயற்கை நுண்ணறிவுத் திட்டங்களைக் கையாள்கிறது:

1. பிராஜெக்ட் நிம்பஸ்: 120 கோடி டொலர்கள் மதிப்புள்ள திட்டம்தான் 'பிராஜெக்ட் நிம்பஸ்'. "விலக்கப்பட்டவர்களுக்கு எந்தத் தொழில்நுட்பமும் கிடையாது" என்ற அமைப்பைச் சேர்ந்த 28 தகவல் தொழில்நுட்ப நிபுணர்களை 'கூகுள்' நிறுவனம் வேலையைவிட்டு நீக்கியபோதுதான், இந்தத் திட்டம் குறித்து தெரியவந்தது. இஸ்ரேலிய இராணுவத்துக்காக இஸ்ரேலிய அரசுக்குத் தேவைப்பட்ட தரவுகளை (கிளவுட் சர்வீஸ்) தருமாறு கூகுள், அமேசான் நிறுவனங்களுடன் 2021இல் ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது.

இது தொடர்பாக டெம்பின்ஸ்கி தனது காணொலியில் ஒரு தகவலைத் தெரிவித்திருக்கிறார். சேகரிக்கப்படும் தரவுகள் செயற்கை நுண்ணறிவுடன் இலக்குகளைத் தாக்கவும், ஆளில்லாமல் ஏவப்படும் ஏவு கருவிகள் (டிரோன்களைப் போல) இலக்கை நோக்கி சரியாகச் செல்கிறதா என்று கண்காணிக்கவும் பயன்படுத்தப்படும் என்கிறார்.

இந்த நிறுவனங்கள் தரவுகளைத் தருவதுடன் செயற்கை நுண்ணறிவு பயன்படுத்தப்பட, தாக்க வேண்டிய இடம் இப்போது எப்படி இருக்கிறது என்று புகைப்படங்களாகவும் வரைபடங்களாகவும்கூட தகவல்களைத் தெரிவித்தது என்கிறது 'கார்டியன்'. மைக்ரோசாஃப்டின் 'மைக்ரோசாஃப்ட் அசூர்' என்ற தொழில்நுட்பம் ஒருவருடைய முகத்தைத் திரையில் காட்டினாலே, அவர் யாரென்று அடையாளம் காட்டிவிடும்.

2. பிராஜெக்ட் சிரியஸ்: இதுவும் 'நிம்பஸ்' உடன் தொடர்புள்ளது, ஆனால் எந்தத் தொழில்நுட்ப நிறுவனத்துடனும் ஒப்பந்தம் இறுதிசெய்யப்படவில்லை. ஈராணுவத்தின் தரவுகளை நிம்பஸுடன் இணைக்க நிபுணர்களைத் தேடிக்கொண்டிருக்கிறது இஸ்ரேல். இஸ்ரேலியஈராணுவப் பயன்பாட்டுக்கு மட்டும் தனியாக வைத்துக்கொள்ளப்படும் 'சிரியஸ்'.

3. இஸெட்-ட்யூப்: யூட்யூபைப் போல இஸ்ரேலிய இராணுவத்துக்கு, ஈராணுவத் தொழில்நுட்பம் தொடர்பான தரவுகளுக்கானது. காஸாவில் இந்த நேரம் எந்தெந்தஈராணுவ சாதனங்கள் எங்கெங்கு உள்ளன என்று இஸ்ரேலிய இராணுவ வீரர்கள் தெரிந்துகொள்ள இஸெட்-ட்யூப் உதவும்.

4. மாப்ல்(ட்): உயிருள்ள இலக்குகளை இஸ்ரேலிய இராணுவத்தினர் தேர்வுசெய்தவுடன், அந்த இலக்கு எங்கே இருக்கிறது என்று வரைபடத்தில் காட்ட இந்த மாப்ல்ட் உதவும்.

ஆனால், 'ஜெருசலேம் போஸ்ட்' என்ற பத்திரிகை, இஸ்ரேலிய இராணுவம் (தரைப்படை)ஈரகசியமானதொரு ஜிபிஎஸ் முறையைப் பயன்படுத்துவதாகத் தெரிவித்துள்ளது.

5. ஹண்டர்: காஸா பகுதியில் தாக்க வேண்டிய இலக்குகளை அடையாளமிடவும் அவை எப்படி மாறுகின்றன என்று செயற்கை நுண்ணறிவு உதவியுடன் தொடர்ந்து கண்காணிக்கவும் 'ஹண்டர்' பயன்படுத்தப்படுகிறது என்று '+972' என்ற பத்திரிகைத் தெரிவிக்கிறது. 'கூகுள் மேப்' என்ற செயலியில் ஒருவருடைய வீடு எங்கே இருக்கிறது, எந்த வழியாகப் போகலாம் என்றெல்லாம் பார்க்கிறோம். இதுவும் அதேபோலத்தான், ஆனால் உளவு வேலைக்கு உதவும்.

சிறுவர்கள் கைப்பேசியில் பொழுதுபோக்குக்கு, ஓர் இலக்கைத் தேடிச்சென்று துப்பாக்கியால் சுடுவதைப் போன்ற விளையாட்டை விளையாடுவார்கள். இப்போது இஸ்ரேலிய இராணுவத்தின் மையகட்டுப்பாட்டு அறையில் இருக்கும் இராணுவத்தினரும் அதைப் போலவே செயற்கை நுண்ணறிவு உதவியுடன் தங்களுடைய இலக்குகளைத் தேடி அழிக்கின்றனர் என்கிறது 'டைம்ஸ் நவ் வேர்ல்ட்'.

(இந்தக் கட்டுரையின் முகப்புப் படம் செயற்கை நுண்ணறிவு உதவியால் மெட்டாவிலிருந்து எடுக்கப்பட்டது. ஏனைய புகைப்படங்கள் சாட்-ஜிபிடி செயற்கை நுண்ணறிவு உருவாக்கியது).

© த டான், ப் தமிழில் - அருஞ்சொல்

# தபால்மூல வாக்களிப்பு விநியோகிக்கும் அலுவலர்களுக்கான செயலமர்வு யாழில்



நாடாளுமன்றதேர்தலில்தபால்மூலவாக்களிப்புக்கான வாக்குச்சீட்டு விநியோகிக்கும் அலுவலர்களுக்கான செயலமர்வு யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற்றது.

யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபனின் தலைமையில் இந்த செயலமர்வு நடைபெற்றது.

இதன்போது கருத்து தெரிவித்த அரசாங்க அதிபர், கடந்த ஜனாதிபதி தேர்தல் நீதியாகவும் சுமுகமாகவும் நடைபெற்றதற்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் தமது நன்றிகளைத் தெரிவித்தார்.

மேலும், தபால் மூலமான வாக்களிப்புக்கான வாக்குச்சீட்டுக்கள் மற்றும் உரிய ஆவணங்களை பொதியிட்டு விநியோகிக்கும் கடமை ஒரு குழுக்கடமை என்பதால் கடமைகளில் ஈடுபடும் அலுவலர்கள் வினைத்திறமையாக செயற்பட்டு ஒத்துழைப்பு வழங்குமாறும் கேட்டுக்கொண்டார்.

நாடாளுமன்ற தேர்தலில் தபால் மூல வாக்களிப்பு கடமைகளில் ஈடுபடவுள்ள அலுவலர்களுக்கான கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உதவித் தேர்தல் ஆணையாளர் அமல்ராஜ் விளக்கமளித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் தபால் மூல வாக்களிப்புக்கான வாக்குச்சீட்டு விநியோகிக்கும் கடமையில் ஈடுபடவுள்ள பதவிநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.(05)





# வீட்டின் மீது மண்மேடு சரிந்து வீழ்ந்து பெண் உட்பட இரண்டு பேர் காயம்

வெலிகம, பொல்வத்த பிரதேசத்தில் உள்ள வீடொன்றின் மீது மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் பெண் உட்பட இருவர் காயமடைந்துள்ளனர்.

48 வயதுடைய பெண்ணும் 51 வயதுடைய நபருமே காயமடைந்துள்ளனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

இவர்கள் இருவரும் வீட்டின் சமையலறையில் காலை உணவு தயாரித்துக் கொண்டிருக்கும் போது வீட்டின் மீது திடீரென மண்மேடு சரிந்து வீழ்ந்துள்ளது.

இதன்போது, இவர்கள் இருவரும் மண்மேட்டில் சிக்கியுள்ள நிலையில், அலறல் சத்தத்தைக் கேட்ட பிரதேசவாசிகள் அவர்களைக் காப்பாற்றியுள்ளனர்.

இதனையடுத்து, காயமடைந்த இருவரும் வெலிகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் படுகாயமடைந்த நபர் மேலதிக சிகிச்சைக்காக மாத்தறை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.(05)

# தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் பிரகாரம் செப்ரெம்பர் பணவீக்கம் 0.2 சதவீதமாக வீழ்ச்சி

தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெணுக்கு அமைவாக மதிப்பிடப்படும் நாடளாவிய ரீதியிலான பணவீக்கம் கடந்த ஒகஸ்ட் மாதம் 1.1 சதவீதமாகப் பதிவாகியிருந்த நிலையில், அது கடந்த செப்ரெம்பர் மாதத்தில் -0.2 சதவீதமாகக் கணிசமான அளவால் வீழ்ச்சியடைந்துள்ளது.

அதேபோன்று புள்ளிவிவரத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட இக்கணிப்பீட்டின் பிரகாரம் ஒகஸ்ட் மாதம் 2.3 சதவீதமாகப் பதிவான உணவுப்பணவீக்கம், செப்ரெம்பரில் 0.5 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

இவ்வாண்டு செப்ரெம்பர் மாதம் சகல பொருள்களுக்குமான தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் 203.1 ஆகப் பதிவாயிருப்பதுடன், இதனைக் கடந்த ஒகஸ்ட் மாதம் பதிவான 204.1 எனும் விலைச்சுட்டெணுடன் ஒப்பிடுகையில் இது 1.0 புள்ளி வீழ்ச்சியைப் பதிவுசெய்துள்ளது.

அத்தோடு தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் பிரகாரம் கணிப்பிடப்படும் ஆண்டுக்கு ஆண்டு பணவீக்கம் செப்டெம்பரில் -0.2 சதவீதமாகப் பதிவாகியுள்ளது.

மேலும் கடந்த ஒகஸ்ட் மாதம் 2.3 சதவீதமாகப் பதிவாகியிருந்த ஆண்டுக்கு ஆண்டு உணவுப்பணவீக்கம் செப்டெம்பரில் 0.5 சதவீதமாகவும், ஒகஸ்ட்டில் 0.2 சதவீதமாகப் பதிவாகியிருந்த ஆண்டுக்கு ஆண்டு உணவல்லாப்பணவீக்கம் செப்ரெம்பரில் -0.7 சதவீதமாகவும் வீழ்ச்சியடைந்துள்ளன. (05)

# பன்றிகளைக் கொண்டு செல்லும்போது கால்நடை சுகாதாரச் சான்றிதழ் தேவை

பன்றிகளை ஏற்றிச் செல்லும் போது கால்நடை சுகாதார சான்றிதழ் வைத்திருப்பதை கட்டாயமாக்க கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத்துறை தீர்மானித்துள்ளது.

நாட்டில் பன்றிகளிடையே ஒருவகை வைரஸ் தொற்று நோய் பரவி வருவதால் குறித்த தீர்மானம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஹேமலி கொத்தலாவல தெரிவித்துள்ளதாவது -

பண்ணை உரிமையாளர்கள் கால்நடை சுகாதார சான்றிதழை அந்தந்த கால்நடை வைத்தியர்களிடம் பெற்றுக்கொள்வது கட்டாயமாகும்.

சரியான சுகாதார சான்றிதழ் இல்லாமல் பன்றிகளை கொண்டு செல்வது கண்டிப்பாக தடைசெய்யப்பட்டுள்ளது. இது பன்றிகளை வைரஸ் நோய் தாக்கத்திலிருந்து பாதுகாப்பதை உறுதி செய்யும் எனத் தெரிவித்துள்ளார்.

(05)

# பாடசாலை பேருந்து, சிற்றூர்திகள் 12 நுவரெலியாவில் திடீர் சேவை நீக்கம்

நுவரெலியா மாவட்டத்தில் பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்வதற்காக பயன்படுத்தப்பட்ட 12 பஸ்கள் மற்றும் வேன்கள் திங்கட்கிழமை காலை சேவையிலிருந்து நீக்கப்பட்டுள்ளன.

நுவரெலியா மாவட்ட பிரதான வாகன பரிசோதகர் தமிந்த திஸாநாயக்க இந்த நடவடிக்கையை எடுத்துள்ளார்.

மஸ்கெலியா, சாமிமலை, பொகவந்தலாவை, நோர்டன்பிரிட்ஜ், தலவாக்கலை, கொட்டகலை உள்ளிட்ட பகுதிகளில் இருந்து நாளாந்தம் பாடசாலை போக்குவரத்து சேவையில் ஈடுப்படும் 30 தனியார் பஸ்கள் மற்றும் வேன்களை பரிசோதித்து ஏதேனும் குறைபாடுகள் உள்ளனவான என கண்டறியுமாறு ஹட்டன் பொலிஸ் போக்குவரத்து பிரிவு அதிகாரிகள் நுவரெலியா மாவட்ட பிரதான மோட்டார் வாகன பரிசோதகருக்கு பணிப்புரை விடுத்திருந்தனர்.

அதன்படி, கடந்த 14 நாள்களாக இப்பகுதிகளில் பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லும் வாகனங்களை கடுமையாக பரிசோதித்த போது அதில் 12 வாகனங்களில் குறைபாடுகள் கண்டறியப்பட்டுள்ளன.

இந்நிலையில், குறித்த வாகனங்கள் சேவையிலிருந்து நீக்கப்பட்டு, அவற்றின் வாகன வருமான அனுமதிப்பத்திரங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த வாகனங்களில் பாடசாலைக்கு பயணம் செய்த மாணவர்களின் பெற்றோர் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்ததை அடுத்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(05)

# வைத்தியர் வீட்டுக்குள் புகுந்து அச்சுறுத்தி கொள்ளையிட்ட 2 சந்தேகநபர்கள் கைது

தலங்கமை பிரதேசத்தில் உள்ள வைத்தியர் ஒருவரின் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து, வைத்தியரிடம் கத்தியைக் காண்பித்து அச்சுறுத்தி பணம் மற்றும் தங்க நகைகளை கொள்ளையிட்டு தப்பிச் சென்றதாகக் கூறப்படும் இரண்டு சந்தேக நபர்கள் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர் என தலங்கமை பொலிஸார் தெரிவித்தனர்.

ஸ்ரீஜயவர்தனபுர வைத்தியசாலையில் பணிபுரியும் வைத்தியர் ஒருவரே இந்த சம்பவத்துக்கு முகங்கொடுத்துள்ளார்.

இந்த கொள்ளை சம்பவம் தொடர்பில் கடந்த 19 ஆம் திகதி தலங்கமை பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 23 மற்றும் 45 வயதுடையவர்கள் ஆவர்.

சந்தேகநபர்கள் இருவரும் போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொள்ளையிடப்பட்டதாக கூறப்படும் தங்க நகைகளின் மொத்த பெறுமதி 7 லட்சம் ரூபா ஆகும்.

இந்தக் கொள்ளை சம்பவம் வைத்தியரின் வீட்டிற்கு அருகில் உள்ள சிசிரிவி கமராவில் பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் கடுவலை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

(05)

# வன்னிவிளாங்குளம் துயிலும் இல்லத்தில் சிரமதானப் பணிகள்





மாவீரர் நாளினை உணர்வு பூர்வமாக அனுஸ்டிக்கும் முகமாக 2024.11.27 முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள வன்னிவிளாங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

வன்னிவிளாங்குளம் மாவீரர் துயிலும் இல்ல பணிக்குழுவின் ஏற்பாட்டில் இந்த சிரமதான பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டும் 2024.11.27 மாவீரர் நாளினை உணர்வு பூர்வமாக அனுஸ்டிக்கும் முகமாக பணிக்குழுவால் அனைத்து ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்படவுள்ள நிலையில் அதன் ஆரம்ப கட்டமாக சிரமதான பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# தேர்தல் சுவரொட்டிகளை ஒட்டிய ஐவர் கைதாகினர்

எதிர்வரும் நவம்பர் மாதம் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர் ஒருவருக்குச் சார்பாக, தேர்தல் சட்டத்தை மீறி பொது இடங்களில் சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்த ஐந்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொரளை பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் பொரளை பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொரளை பிரதேசத்தில் வசிக்கும் ஐந்து நபர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 1,500 சுவரொட்டிகள், பசை, ஓட்டோ மற்றும் மோட்டார் சைக்கிள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர்கள் ஐவரும் கூலிக்காக இவ்வாறு சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்துள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் ஐவரும் திங்கட்கிழமை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொரளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)



## தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணிகள் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர்கள் ஊடாக முன்னெடுக்கப்படுகின்றன. தேர்தல் செலவினங்கள் தொடர்பானவர்த்தமானிவெளியிடப்பட்டுள்ளது.

மாவட்டங்களின் நிலப்பரப்பு மற்றும் சனத்தொகை, தேர்தல் தொகுதிகளில் உள்ள வாக்காளர்களின் எண்ணிக்கை மற்றும் போட்டியிடும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் யோசனைகளுக்கு அமைவாகவே தேர்தல் செலவுத் தொகை தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆகவே தேர்தல் பரப்புரை செலவுத் தொகை மாவட்டத்துக்கு மாவட்டம் வேறுப்படும்.

தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளில் ஈடுபடும்அரசியல்கட்சிகள்மற்றும்சுயேச்சைக் குழுக்கள் தேர்தல் பரப்புரைச் செலவுகள் தொடர்பிலான குறிப்புக்களை முறையாகப் பேணப்படவேண்டும். முடிவுகள் வெளியாகி 21 நாட்களுக்குள் செலவினம் தொடர்பான விவரங்களை ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பிக்கவேண்டும். செலவுகளை சமர்ப்பிக்காவிடின் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட 35 வேட்பாளர்கள் உரிய காலத்தில் பரப்புரைச் செலவினங்கள் தொடர்பிலான விவரத் திரட்டை உரிய காலத்தில் சமர்ப்பித்தனர். 3 வேட்பாளர்கள் தாமதமான நிலையில்தான் விவரங்களைச் சமர்ப்பித்தனர்.

ஜனாதிபதித் தேர்தல் பரப்புரையின்போது வேட்பாளர்கள் செய்த செலவு விவரங்களை அறிந்துக்கொள்ளும்உரிமைநாட்டுமக்களுக்கு உண்டு. ஆகவே சமர்ப்பிக்கப்பட்டுள்ள விவரங்களைகாட்சிப்படுத்தும், இடம் மற்றும் திகதி தொடர்பான விவரங்கள் புதன்கிழமை (இன்று) அறிவிக்கப்படும் என்றார்.

## அமைச்சரவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரூபாய்கள் மதிப்பீட்டுத்தொகை கிடைக்கப் பெற்றுள்ளதுடன், குறித்த கருத்திட்டத்தை இவ்வாண்டிலேயே பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது.

அதற்கிணங்க, எக்கல்லோயா சுற்றுலா விடுதி மற்றும் றிவர்ஸ்டன் சுற்றுலா விடுதிகளை நவீனமயப்படுத்துவதற்கான பணிகளைபொறியியல்பணிகள்தொடர்பான மத்திய ஆலோசனைப் பணியகத்தின் மேற்பார்வையின் கீழ் மத்திய பொறியியல் சேவைகள்தனியார் கம்பனிகள்மூலம்பூர்த்தி செய்வதற்காக சுற்றாடல், வனசீவராசிகள், வனவளங்கள், நீர்வழங்கல், பெருந்தோட்டம் மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் அவர்கள்சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது

..................

சர்வதேசவிமானசேவைகள்நிறுவனத்தின் நிதியனுசரணையின் கீழ் பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, மாலைதீவு, நேபாளம், பாகிஸ்தான் மற்றும் இலங்கை போன்ற தெற்காசிய நாடுகளின் ஒத்துழைப்புடன் 'தொழிற்படுத்தல் பாதிப்புகளற்ற விமானப் போக்குவரத்து தகுதியை தொடர்ச்சியாக பேணிச் செல்வதற்கான ஒத்துழைப்பு அபிவிருத்தி வேலைத்திட்டம்- தெற்காசியா' 1997 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அந்தந்த நாடுகள் குறித்த வேலைத் திட்டத்துக்காக வருடாந்த செலவுகளுக்கான ஒத்துழைப்புக்களைவழங்கவேண்டியதுடன், தற்போதுஇலங்கைகட்டம்யுவரைபங்களிப்புத் தொகையை செலுத்தியுள்ளது.

குறித்த வேலைத்திட்டத்தின் கட்டம் யு இன் கீழ் 08 நோக்கங்களை அடைவதற்காக 05 வருடங்களுக்கான வேலைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, குறித்த வேலைத் திட்டத்தின் அடுத்த 5 ஆண்டுகளுக்கு 95,848 அமெரிக்க டொலர்கள் வீதம் வருடாந்தம் செலுத்துவதற்கும், சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து சேவைகள் நிறுவனத்துக்கு குறித்த வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள்அமைச்சர்சமர்ப்பித்தயோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

சர்வதேசவிமானசேவைகள்நிறுவனத்தின் நிதியனுசரணையின் கீழ் பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, மாலைதீவு, நேபாளம், பாகிஸ்தான் மற்றும் இலங்கை போன்ற தெற்காசிய நாடுகளின் ஒத்துழைப்புடன் 'தொழிற்படுத்தல் பாதிப்புகளற்ற விமானப் போக்குவரத்து தகுதியை தொடர்ச்சியாக பேணிச் செல்வதற்கான ஒத்துழைப்பு அபிவிருத்தி வேலைத்திட்டம்- தெற்காசியா' 1997 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அந்தந்த நாடுகள் குறித்த வேலைத் திட்டத்துக்காக வருடாந்த செலவுகளுக்கான ஒத்துழைப்புக்களைவழங்கவேண்டியதுடன், தற்போதுஇலங்கைகட்டம்யுவரைபங்களிப்புத் தொகையை செலுத்தியுள்ளது.

குறித்த வேலைத்திட்டத்தின் கட்டம் யு இன் கீழ் 08 நோக்கங்களை அடைவதற்காக 05 வருடங்களுக்கான வேலைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, குறித்த வேலைத் திட்டத்தின் அடுத்த 5 ஆண்டுகளுக்கு 95,848 அமெரிக்க டொலர்கள் வீதம் வருடாந்தம் செலுத்துவதற்கும், சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து சேவைகள் நிறுவனத்துக்கு குறித்த வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள்அமைச்சர்சமர்ப்பித்தயோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

.......................

பௌத்தஅலுவல்கள்திணைக்களத்துக்குச் சொந்தமான கொழும்பு 07, விஜேராம மாவத்தையில் அமைந்துள்ள தங்குமிட ஆச்சிரமத்தின் கட்டடமானது மகாநாயக்க தேரர்கள் கொழும்புக்கு வருகைதரும் போது தங்குமிட வசதிகளை வழங்குவதற்காகப் பயன்படுத்தப்படுகின்றது.

இவ் ஆச்சிரமத்தின் பொது வசதிகள் போதியளவு இன்மையால் கடற்படையினரின் ஒத்துழைப்புடன் புனரமைப்புப் பணிகள் 2021 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டன.

மூலப்பொருட்களின் சந்தை விலை அதிகரிப்பு மற்றும் மேலதிகமாக அடையாளங் காணப்பட்டுள்ள நிர்மாணப் பணிகளை மேற்கொள்ள வேண்டியிருப்பதால் ஆரம்ப மதிப்பீட்டுச் செலவைத் திருத்தம் செய்ய வேண்டியுள்ளது.

அதற்கமைய, குறித்த மறுசீரமைப்புப் பணிகளுக்கான மதிப்பீட்டை 86.97 மில்லியன்களாகத் திருத்தம் செய்வதற்கும், 2024 ஆம் ஆண்டுக்குத் தேவையான மேலதிக 31.86 மில்லியன் நிதியை பௌத்த அலுவல்கள் திணைக்களத்துக்குப் பெற்றுக் கொள்வதற்குமாக புத்தசாசன, சமய மற்றும் கலாசார விவகாரங்கள், தேசிய ஒருமைப்பாடு, சமூகப்பாதுகாப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## திறைசேரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயலாளராக நியமிப்பதற்கும், தற்போது பிரதிச் செயலாளராகக் கடமையாற்றும் ரத்னாயக்க கடந்த நவம்பர் 6 ஆம் திகதி ஓய்வு பெற்ற பின்னரான வெற்றிடத்திற்கு தற்போது வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக கடமையாற்றும் இலங்கை திட்டமிடல் சேவையின் விசேடதர அதிகாரியான அபேசேகரவை நியமிப்பதற்கும் அமைச்சரவை அங்கீகாரமளித்துள்ளது.

சில்வா திறைசேரி பிரதிச் செயலாளராக நியமிக்கப்பட்டமையால் வெற்றிடமான திறைசேரி நடவடிக்கைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு தற்போது அரச நிதித் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகமாகக் கடமையாற்றும் இலங்கைக்கணக்காளர்சேவையின்விசேடதர அதிகாரியான ஹபுகலவை நியமிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது,

கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வைத் திணைக்களத்தின் பதில் கடமையிலுள்ள பணிப்பாளர் நாயகமாகக் கடமையாற்றிய இலங்கை திட்டமிடல் சேவையின்விசேடதரஅதிகாரியானரஞ்சித்தை குறித்த திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக நியமிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போது வெற்றிடமாகவுள்ள தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு குறித்த திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகமாகக் கடமையாற்றும் இலங்கை திட்டமிடல் சேவையின்விசேடதரஅதிகாரியானரத்னாயக்கவை நியமிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# தபால் மூல வாக்களிப்பு; கிளிநொச்சியில் கூட்டம்

நடைபெறவுள்ள நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் சிங்கள மொழி மூல தபால் மூல வாக்களிப்பு அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுடனான கலந்துரையாடல் நேற்று கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் காலை 9.00 மணிக்கு நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட பதில் செயலாளர் முரளிதரன் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் அவர் தெரிவித்ததாவது:

ஒக்டோபர் 30 மற்றும் நவம்பர் 4 ஆகிய நாள்களில் பொலிஸ், மாவட்டச் செயலகம் மற்றும் மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்தில் கடமையாற்றுபவர்களுக்கும், நவம்பர் 1 மற்றும் 4 ஆகிய நாள்களில் பிற அரச நிறுவனங்களில் கடமையாற்றுபவர்களுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் தபால் மூல வாக்களிப்பு நடைபெறவுள்ளது.

இந்த நாட்களில் வாக்களிக்க முடியாமல் தவறவிட்டவர்களுக்கான மீள் வாக்களிப்பு நவம்பர் 7, 8 ஆகிய இருநாள்களும் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

தபால் மூல வாக்களிப்புக் கடமைக்காக அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ள நீங்கள் நீதியானதும் நியாயமானதுமான தேர்தலை நடத்துவதற்கு ஒத்துழைக்கவேண்டும். மேலும் நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தல் கடமைகளில் வழங்கிய முழு ஒத்துழைப்புக்கு நன்றி - என்றார்.

நாடாளுமன்றத் தேர்தலில் தபால் மூல அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களின் கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக தேர்தல்கள் திணைக்களத்தின் பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் புலத்சிங்கள விளக்கமளித்தார்.

இக் கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் அமல்ராஜ், அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# நேருக்கு நேர் மோதி இரு பஸ்கள் விபத்து

## 28 பயணிகள் காயம்

இரண்டுதனியார்பஸ்கள்ஒன்றுடன்ஒன்று மோதிய விபத்தில் 28 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அவிசாவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தெவ்ரும்பிட்டிய வளைவுக்கு அருகில் இந்த விபத்து இடம்பெற்றது. கொழும்பில் இருந்து எம்பிலிப்பிட்டிய சூரியவெள நோக்கிப் பயணித்ததனியார்பஸ்ஸும்இரத்தினபுரியில் இருந்து கொழும்பு நோக்கப் பயணித்த தனியார் பஸ்ஸும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

நேற்று இடம்பெற்ற இந்த விபத்தில் காயமடைந்தவர்கள் அவிசாவளை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளமையுடன் மூவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, அலவ்வ - கிரிஉல்ல வீதியின் போயவலன நகரில் பயணிகள் பஸ்ஸும் வானும் நேற்று நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் வானின் சாரதியும் மற்றுமொருவரும் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இதனிடையேகுளியாப்பிட்டியகடனெகெதர பிரதேசத்தில் ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களை ஏற்றிச்சென்ற பஸ் ஒன்று வீதியை விட்டு விலகி இன்று காலை விபத்துக்குள்ளாகியது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

# தேரர் தலைமையிலான மருத்துவ சங்கம் கல்முனை வைத்தியசாலைக்கு உதவிகள்

## ரூ. 15 மில்லியன் பெறுமதியான உபகரணங்கள் கையளிப்பு

( வி.ரி.சகாதேவராஜா)

தேரர் தலைமையிலான மருத்துவ சங்கத்தினர் கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு 15 மில்லியன் ரூபாய் (ஒன்றரைக் கோடி ரூபாய்)பெறுமதியான உபகரணங்களை அன்பளிப்புச் செய்துள்ளனர்.

மருத்துவ சேவைகள் சங்கம், ஆஸ்திரேலியாவின் வன்னி ஹோப் லிமிடெட் உடன் இணைந்து, கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலைக்கு இந்த 15 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள மருத்துவ உபகரணங்களை திங்கட்கிழமை வழங்கியது.

இந்த உபகரணங்கள் உள்ளூர் சமூகத்தின் சுகாதார சேவைகளை மேம்படுத்துவதையும் நல்வாழ்வை மேம்படுத் துவதையும் நோக்கமாகக் கொண்டு வழங்கப்பட்டுள்ளது.

மருத்துவ சேவைச் சங்கத்தின் பணிப்பாளர் வண. ராஜவல்லே சுபுதி தேரர், அமெரிக்கா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா மற்றும் ஜெர்மனி உள்ளிட்ட பல்வேறு இடங்களில் இருந்து உபகரணங்களை தனிப்பட்ட முறையில் பெற்றுக்கொண்டார்.

ஆஸ்திரேலியாவின் வன்னி ஹோப் லிமிடெட் இயக்குநர் ரஞ்சன் சிவஞானசுந்தரம், அவற்றுக்கான கப்பல் கட்டணம் மற்றும் தொடர்புடைய வரிகளைச் செலுத்துவதில் முக்கிய பங்கு வகித்தார்.

ஆதார வைத்தியசாலை கல்முனை வடக்கு வளாகத்தில் அதிகாரப்பூர்வமாகக் கையளிப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

ராஜவல்லே சுபுதி தேரர், கல்முனை ஆதார வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் ரங்க சந்திரசேனவிடம் மருத்துவ உபகரணங்களை கையளித்தார்.

மருத்துவ சேவை சங்கம், வன்னி ஹோப் அறக்கட்டளை மற்றும் ஆதார வைத்தியசாலை ஆகியவற்றின் பல பிரதிநிதிகளும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# காத்தான்குடி பகுதியில் கசிப்புடன் 25 பேர் கைது



மட்டக்களப்பு - காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பல இடங்களில் 5000 லீற்றர் கசிப்பு போதைப்பொருளுடன் 25 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்படி, காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆரையம்பதி, தாழுங்குடா, புதுக்குடியிருப்பு, நாவற்குடா, கல்லடி உட்பட பல இடங்களில் பொலிஸார் திடீர் சுற்றிவளைப்பை மேற்கொண்டனர்.

இதன் போது கசிப்பு விற்பனை செய்யும் இடங்கள் கசப்பு உற்பத்தி நிலையங்கள் என்பன பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டன.

மேலும், கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் பெருமளவிலான உபகரணங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட நபர்கள் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர். காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.(05)

# பல்கலைக்கழகம் செல்லும் 33 பேருக்குக் கௌரவிப்பு







(வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவிலிருந்து இம்முறை பல்கலைக்கழகம் செல்லும் 33 பேர் கௌரவிக்கப்பட்டனர்.

காரைதீவு ட்ராக்ஸ் அட்ன்ட அஸ்கோ (TRAKS & ASCO) அமைப்பின் ஏற்பாட்டில் காரைதீவு விபுலாநந்த கலாசார மண்டபத்தில் இது தொடர்பான நிகழ்வு சனிக்கிழமை அமைப்பின் செயலாளர் எஸ்.நந்தகுமார் தலைமையில் நடைபெற்றது.

லண்டனில் வாழும் காரைதீவைச் சேர்ந்த வைத்திய நிபுணர் வரதராசன் தனது பெற்றோர் சார்பில் உருவாக்கிய இந்த அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெறும் நான்காவது கௌரவிப்பு நிகழ்வு இதுவாகும்.

இந்நிகழ்வுக்கு முதன்மை அதிதியாக சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை பொது சத்திரசிகிச்சை நிபுணர் அகிலன் கலந்து சிறப்பித்தார்.

நட்சத்திர அதிதிகளாக சிவ.ஜெகராஜன் (அம்பாறை மாவட்ட மேலதிகச் செயலர்),அருணன் (காரைதீவு பிரதேச செயலாளர்), சுந்தரகுமார் (காரைதீவு பிரதேச சபை செயலாளர்) பார்த்தீபன் (கிழக்கு மாகாண கல்வித் திணைக்கள உதவிக் கல்விப் பணிப்பாளர்), வி.ரி.சகாதேவராஜா (காரைதீவு, ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர்) ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.

விழாவில் மண்ணுக்கு மகிமை சேர்த்தவர்கள் வரிசையில் பொது சத்திரசிகிச்சை நிபுணர் அகிலன், சிவ.ஜெகராஜன், சகாதேவராஜா (ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர், காரைதீவு) ஆகியோர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

மேலும், விஞ்சைமிகு அதிதிகளாக வைத்தியர் மஞ்சுரேகா (ஆதார வைத்தியசாலை, கல்முனை வடக்கு), வைத்தியர் கீர்த்திகா (அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை,கல்முனை).மகேந்திரராஜா (இலங்கை வங்கி ஓய்வுநிலை-முகாமையாளர், காரைதீவு) வைத்திய அதிகாரிகளான மைத்ரி தினேஸ்காந்த் (ஆதார வைத்தியசாலை,கல்முனை வடக்கு) றேணுபிரியக்சன் (ஆதார வைத்தியசாலை, திருக்கோவில்). ஆதர்ஷன் (ஆதார வைத்தியசாலை, சம்மாந்துறை) மற்றும் மணிமாறன் (அதிபர், சண்முகா மகாவித்தியாலயம் காரைதீவு) ஆசிரியர் இரட்ணகுமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இத்துடன் பெற்றோர்கள் மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டதுடன் சிறப்பு கௌரவிப்புக்களும் பணப்பரிசில்களும் பதக்கங்களும் சாதனையாளர்களுக்கு வழங்கப்பட்டன.

# மோட்டார் சைக்கிள் - லொறி விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

இரத்தினபுரி, கஹவத்தை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பெல்மடுல்ல - நோனாகம வீதியில் வெல்லந்துர பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என கஹவத்தை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

கடும் மழையுடன் கூடிய வானிலை காரணமாக சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் ஒன்று வீதியில் சறுக்கிச் சென்று கவிழ்ந்து எதிர்த்திசையில் பயணித்த லொறியுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது மோட்டார் சைக்கிளின் செலுத்துநர் படுகாயமடைந்துள்ள நிலையில் கஹவத்தை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இரத்தினபுரி பலாங்கொடை பிரதேசத்தைச் சேர்ந்த 59 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து லொறியின் சாரதி சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கஹவத்தை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (05)




# திரிபுபடுத்தப்பட்ட அறிக்கையை ஏற்கோம் பொதுமக்களை தவறாக வழிநடத்த முயற்சி

## கர்தினால் மல்கம் ரஞ்சித் விசனம்



2019 உயிர்த்தஞாயிறு தாக்குதல் தொடர்பில் பொதுமக்களை தவறாக வழிநடத்துவதற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றன என பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

முன்னாள் அரசாங்கத்தை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினகள் அதிகாரிகள் குழுவொன்று விசாரணைகள் தொடர்பில்குழப்பத்தைஏற்படுத்த முயல்கின்றது என கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

முன்னைய அரசாங்கத்தின் இரண்டு அறிக்கைகளில் ஒன்றில் உயிர்த்த ஞாயிறு குறித்த விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைகள் காணப்படுகின்றன.

புதிய அறிக்கைகளில் அரசாங்கத்தின் தற்போதைய அறிக்கைகள் குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது,முன்னையஅரசாங்கம்இந்த பரிந்துரைகள் குறித்து அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது.

நாங்கள்இந்தஇரண்டுஅறிக்கைகளையும் ஏற்றுக்கொள்ளவில்லை, தற்போதைய ஜனாதிபதி உயிர்த்த ஞாயிறுதாக்குதல் குறித்து விசாரணைகளை மேற்கொள்வதாக உறுதியளித்துள்ளார், அவர் அதனை நிறைவேற்றுவாரா என கத்தோலிக்க திருச்சபை பார்த்துக்கொண்டிருக்கின்றது.(05)

# ஹெரோயினுடன் ஒருவர் வத்தளையில் கைது

வத்தளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட களுபாலத்திற்கு அருகில் ஹெரோயின் மற்றும் போதைப்பொருள் கடத்தல் மூலம் சம்பாதித்ததாக சந்தேகிக்கப்படும் பணத்துடன் சந்தேக நபரொருவர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ்விசேடஅதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் கொலன்னாவை பிரதேசத்தைச் சேர்ந்த 41 வயதுடையவர் ஆவார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்து 258 கிராம் ஹெரோயின், போதைப்பொருள் கடத்தல் மூலம் சம்பாதித்ததாக சந்தேகிக்கப்படும் 3,069,890 ரூபா பணம் மற்றும் கார் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து, சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக வத்தளை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வத்தளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# பல்வேறு திருட்டுக்களுடன் தொடர்புடைய நபர் கைது

நாரம்மல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தம்பகிரிகம பிரதேசத்தில் பல்வேறு திருட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என நாரம்மல பொலிஸார் தெரிவித்தனர்.

நாரம்மல பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கேகாலை பிரதேசத்தைச் சேர்ந்த 21 வயதுடைய நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், திருடப்பட்ட பொருள்கள் மற்றும்பணத்தைப்பயன்படுத்திகொள்வனவு செய்ததாகக் கூறப்படும் மோட்டார் சைக்கிள் ஒன்றை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இதுதொடர்பானமேலதிகவிசாரணைகளை நாரம்மல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# வைத்தியரைத் தாக்கி வைத்தியசாலையின் சொத்துகளை சேதப்படுத்திய எழுவர் கைது

முல்லேரியா, கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலையில் பணிபுரியும் வைத்தியர் ஒருவரை தாக்கி வைத்தியசாலையின் சொத்துக்களைச் சேதப்படுத்தியதாகக் கூறப்படும் இரண்டு பெண்கள் உட்பட ஏழு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என முல்லேரியா பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

நிகழ்வொன்றில்கலந்து கொண்டு மீண்டும் வீடு நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த 21 வயதுடைய இளைஞன் ஒருவன் விபத்தில்சிக்கிபடுகாயமடைந்துள்ள நிலையில் சிகிச்சைக்காக முல்லேரியா, கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், காயமடைந்த இளைஞனை மேலதிக சிகிச்சைக்காகக் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு உடனடியாக மாற்றுவதற்கு தாமதிப்பதாகக் கூறி காயமடைந்த இளைஞனின் நண்பர்கள் சிலர் அங்கிருந்த வைத்தியர் ஒருவருடன் தகராறில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போது, காயமடைந்த இளைஞனின் நண்பர்கள் அந்த வைத்தியரைத் தாக்கியுள்ளதுடன் வைத்தியசாலையிலிருந்த சொத்துக்களையும் உடைத்துச் சேதப்படுத்தியுள்ளனர்.

இதுதொடர்பில்பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்டவிசாரணையில் இந்தசம்பவத்துடன்தொடர்புடைய ஏழு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முல்லேரியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)



காலைக்கதிர் Kalaikkathir

# தமிழர்களின் அரசியல் பிரச்சினையை தீர்க்கக்கூடிய தலைவர் சஜித் மட்டுமே

## சந்திரகுமார் தெரிவிப்பு



தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்க்கக்கூடிய தென்னிலங்கை தலைவர் சஜீத் பிரேமதாச மாத்திரமே. அதனால்தான் தமிழ் மக்கள் ஜனாதிபதி தேர்தலில் அவரை ஆதரித்தனர் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாண தேர்தல் மாவட்ட முதன்மை வேட்பாளர் சந்திரகுமார் தெரிவித்தார்.

கிளிநொச்சி பளைப் பகுதியில் நேற்று நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் மக்களின் தீர்வு விடயத்தில் ஓரளவுக்காவது அக்கறையுள்ள தலைவராக சஜித் பிரேமதாசவே காணப்படுகின்றார். இதனால்தான் தமிழ் மக்கள் ஜனாதிபதித் தேர்தலில் அவருக்கு பெருவாரியாக வாக்களித்திருந்தனர்.

அந்தக் கட்சியுடன் சேர்ந்தே சமத்துவக் கட்சி இந்தத் தேர்தலை எதிர்கொள்கின்றது. சமத்துவக்கட்சி மாத்திரம் அல்ல மலையக தமிழ் கட்சிகள் மற்றும் முஸ்லிம் கட்சிகளும் அவருடனேயே இணைந்துள்ளன.

சிறுபான்மைக் கட்சிகள் பல இணைந்துள்ள கட்சி ஐக்கிய மக்கள் சக்தி. நாடாளுமன்றத் தேர்தலில் அதுவே வெற்றி பெறும் – என்றார்

(113)

# முன்னாள் அமைச்சரின் உறவினரின் வீட்டிலிருந்து ஆடம்பரக் கார்கள் மீட்பு

முன்னாள் அமைச்சர் ரோகித அபயகுணவர்த்தனவின் உறவினரின் வீட்டில் மறைத்துவைக்கப்பட்டிருந்த இரண்டு ஆடம்பர வாகனங்களை கண்டி குற்றத்தடுப்பு பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.

அனிவத்த பகுதியில் உள்ள வீடொன்றில் மறைத்துவைக்கப்பட்டிருந்த 60 மில்லியன் ரூபா பெறுமதியான பிஎம்டபில்யூ மற்றும் எஸ்யுவி ரகவாகனத்தையும் கண்டி குற்றத்தடுப்பு பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.

குறிப்பிட்ட வீட்டில் வாகத்தரிப்பிடமொன்றை சோதனையிட்டவேளை இந்த வாகனங்களை கண்டுபிடித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறிப்பிட்ட வாகனங்களிற்கு எவரும் உரிமை கோரவில்லை என்பதால் வாகனங்களை கைப்பற்றியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அந்த வீட்டின் உரிமையாளர் கண்டியில் வாகனவிற்பனையில் ஈடுபட்டுள்ளார், ரோகித அபயகுணவர்த்தனதுறைமுகங்கள்விவகாரத்திற்கான அமைச்சராக பணியாற்றியவேளை இவர் துறைமுக அதிகாரசபையில் அதிகாரியாக பணியாற்றியுள்ளார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த இரண்டு வாகனங்களையும் துறைமுகத்திலிருந்து சட்டவிரோதமாக கொண்டுவந்திருக்கலாம் என சந்தேகம் வெளியிட்டுள்ள பொலிஸார் இரண்டு வாகனங்களையும்அரசாங்கபகுப்பாய்வுதிணைக்களத்திடம் ஒப்படைக்கவுள்ளதாக தெரிவித்துள்ளனர். (05)

# புதையல் தோண்டியவர் குருணாகலில் கைது

குருணாகல், மெல்சிறிபுர பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட ஹெவனதென்ன பிரதேசத்தில் புதையல் தோண்டியதாக கூறப்படும் சந்தேக நபரொருவர் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளதாக மெல்சிறிபுர பொலிஸார் தெரிவித்தனர்.

மெல்சிறிபுர பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் குருணாகல், மெல்சிறிபுர பகுதியைச் சேர்ந்த 40 வயதுடையவர் ஆவார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்து, புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்தப்படும் பொருள்கள், 04 ஜெலட்னைட் குச்சிகள், 06 டெட்டனேட்டர் மற்றும் இரசாயனப் பொருள்கள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மெல்சிறிபுர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# இணையவழி மோசடிகள், போலி முகநூல்கள் தொடர்பில் 8 ஆயிரம் முறைப்பாடுகள் பதிவு

இவ்வருடத்தின்கடந்த9மாதங்களில்இணையவழி மோசடிகள் மற்றும் போலி முகநூல் கணக்குகள் தொடர்பில் 8 ஆயிரம் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என இலங்கை கணினி அவசர தயார்நிலை குழு தெரிவித்துள்ளது.

இலங்கை கணினி அவசர தயார்நிலை குழுவின் பொறியியலாளர் சாருக தமுனுபொல இது தொடர்பில் தெரிவிக்கையில் –

சமூக ஊடகங்களில் உள்ள போலிக் கணக்குகள் மூலம் அதிகளவான இணையவழி மோசடிகள் இடம்பெறுகின்றன.

இணையவழி மோசடிகள் தொடர்பில் கிடைக்கப் பெற்ற8ஆயிரம்முறைப்பாடுகளில்200முறைப்பாடுகள் ஒ.டி.பி. இலக்கங்களுடன் தொடர்புடையவை ஆகும்.

தங்களது ஒ.டி.பி. இலக்கங்களை பல்வேறு நபர்களுக்குப்பகிர்வதாலும்அதிகளவானஇணையவழி மோசடிகள் இடம்பெறுகின்றன.

இதனால், பொதுமக்கள் தங்களது ஒ.டி.பி. இலக்கங்களை எந்த சந்தர்ப்பத்திலும் வேறு நபர்களுக்குப் பகிர வேண்டாம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.10.2024இல் வெளியிடப்பெற்றது